விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

வலம்

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valamp

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 27 திங்கட்கிழமை

முறையான

இலங்கை

சர்வதேச ம

(லண்டன்)

பொறுப்புக்கூறல் நடவடிக்கை
இருக்கும் வெளிப்படையற்ற தன்
உரிமை செயற்பாட்டாளர்கள் மத்
சர்வதேச மன்னிப்புச்சபை, போர்க்
முறையான விசாரணை இடம்பெ

ஜெனிவாவில் இந்த வாரம் ஆரம்பமாகியுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 33ஆவது கூட்டத்தொடருக்காக
ப்புச் சபை எழுதி
லேயே இந்த விட

கைதிகளின் உறவுகள் இன்று கவனயீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களால் யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் இன்றைய தினம் காலை 10 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறைச்சாலைகளில் பல கால

24 ஆம் பக்கம் பார்க்க....

தூய சுதந்திரக்கட்சி என்னிடமே உள்ளது

இரு பிரதான கட்சிகளுமே புதிய கட்சியை அமைக்கப் போகின்றன – மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைத்துள்ள இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஸ்ரீலங்கா ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி எனும் புதிய கட்சியை அமைக்கப்போவதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளது எனத் தெரிவி

உதவி
துப்பாக

யாழ்.தி

(யாழ்ப்பா

யாழில் உள்ள
ஒன்றில் பின் கதவா
விற்றதை தட்டிக்
களை உதவி பொ
ஒருவர் துப்பாக்கி
செய்வேன் என மி
ஒன்று இடம்பெற்

வரலா

தை சீர்குலைப்பதற்கு ல் விமானத் தாக்குதல்

படுகாயம்

தன்சானியா நிலநடுக்கத்தில் 13 பேர் உயிரிழப்பு; 200 பேர் காயம்

(டார் எஸ் சலாம்)

தன்சானியாவில் 5.7 ரிக்டர் அளவுகொண்ட நிலநடுக்கம் ஏற்பட்டதில் 13 பேர் உயிரிழந்தனர் என்று அந்நாட்டு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

வடமேற்கு தன்சானியாவில் 5.7 ரிக்டர் அளவுகொண்ட நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தினால் கட்டடங்கள் குலுங்கின. விக்டோரியா ஏரி அமைந்து உள்ள பகுதியில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. நிலநடுக்கம் காரணமாக புகோபாவில் வீடுகள் இடிந்து விழுந்தன.

இதில் 13 பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது. காயம் அடைந்த 200 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலநடுக்கத்தினால் நாட்டின் தலைநகரில் எந்த ஒரு பாதிப்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கமானது ருவண்டா, உகண்டா மற்றும் கென்யாவிலும் உணரப்பட்டது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (இ-7)

மர்ம காய்ச்சலுக்கு 6 சிறுவர்கள் பலி!

குஜராத்தில் தொண்டை வலியும், கடுமையான காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டு 6 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். குஜராத்தில் பனாஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள காங்கு, கவுன்லா ஆகிய கிராமங்களில் சிறுவர்- சிறுமிகளுக்கு மர்ம நோய் ஒன்று பரவி வருகிறது. இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொண்டை வலியும், கடுமையான காய்ச்சலும் ஏற்படுகிறது. அவர்களுக்கு சிகிச்சை அளித்தாலும் நோய் குணமாவது இல்லை.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டு 6 சிறுவர்கள் உயிர் இழந்துள்ளனர். மேலும் ஏராளமானவர்களுக்கு நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. அவர்கள் பல்வேறு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதையடுத்து மாவட்ட கலெக்டர் தலைமையில் அந்த பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட இந்த பகுதியை மாநில சுகாதார அமைச்சர் சங்கர் சவுத்ரி பார்வையிட்டார்.

அவர் கூறும்போது, இது எந்தவிதமான நோய் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் தொண்டையில் உள்ள சளியை எடுத்து ஆய்வுக்கு அனுப்பி இருக்கிறோம். அது வந்த தற்கு பிறகுதான் அது என்ன நோய் என்பது தெரிய வரும் என்று கூறினார்.

இந்த நோய் மற்ற சிறுவர்களுக்கு பரவாமல் இருக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

த்த கலவரம்; ஆக உயர்வு

வர் பாட் என்ற
திதனையடுத்து
ண்ணிக்கை 75
ங்களிலும் நடந்த
யமடைந்தனர்.
லும் கலவரம்
ாயமடைந்ததாக
் கலவரத்தால்
ாவட்டங்களின்
ர்கள் மீண்டும்

வாமா, குல்காம்,
ளில் சில ஆண்
முறை நடந்தது.
காக இராணுவ
இந்நிலையில்,
தை தொடர்ந்து,
களுக்கு அனுப்பி
போது மீண்டும்
ற்று முன்தினம்
பாதுகாப்புக்காக
ந்த 2014 ஆம்
ீரர்கள் இந்த 4
ளது குறிப்பிடத்

கலகம் செய்பவர்
இருந்து வெளி
ர் ஆலோசனை
காக கடந்த 2
ற்றப்பட்ட பகுதி
ளை நிறுத்தவும்
அதிகார பூர்வ

மகபூபா பேச்சு
ஷ்மீர் முதல்வர்

மெகபூபா முப்தி பேசுகையில்,

"பிரிவினைவாதிகள் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை. இதன்மூலம் மக்கள் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. மேலும் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காணவும் அவர்களுக்கு விருப்பம் இல்லை என்பது தெரிய வருகிறது. பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய மற்றும் பாதுகாப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாநிலதில் அமைதி மற்றும் நிலைத தன்மையை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிலைகளிலும் தீவிரமான மற்றும் இடைவிடாத முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எந்த பிரச்சினைக்கும் வன்முறை தீர்வாகாது. பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைப்பது மட்டுமே பிரச்சினையின் தீர்வுக்கான ஒரே வழியாகும்" என்றார். (இ-7-10)

மேட்டூர் அணை நீர்மட்டம் 79 அடியை எட்டியது

(மேட்டூர்)

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 79 அடியை தாண்டியது.

உச்ச நீதிமன்ற கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய அணைகளில் இருந்து கடந்த 6ஆம் திகதி முதல் விநாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் 10 நாட்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து கர்நாடக மாநில அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல் வழியாக கடந்த 9ஆம் திகதி அதிகாலை மேட்டூர் அணைக்கு வர தொடங்கியது. விநாடிக்கு 7 ஆயிரத்து 905 கன அடியாக இருந்த அணையின் நீர்வரத்து நேற்று முன்தினம் காலையில் விநாடிக்கு 15 ஆயிரத்து 70 கன அடியாக அதிகரித்தது. நேற்று 1000 கன அடி வீதம் தண்ணீர் அதிகரித்து விநாடிக்கு 16 ஆயிரத்து 53 கன அடி வீதம் தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.



நீர்வரத்து அதிகரித்துள்ளதால் 76.74 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் காலை 77.97 அடியாக உயர்ந்தது. நேற்று கூடுதலாக தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் அணையின் நீர்மட்டம் காலை 8 மணி அளவில் 79.26 அடியாக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 1.29 அடி உயர்ந்துள்ளது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1250 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும், காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக கூறுவதாலும் சம்பா சாகுபடிக்கு விரைவில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

தொழிற்சாலையில் திடீர் தீ விபத்து!

26 பேர் உயிரிழப்பு; 74 பேர் படுகாயம்

பங்களாதேஷத்தில் நேற்று முன்தினம் அதிகாலை தொழிற்சாலை ஒன்றில் இராட்சத கொதிகலன் வெடித்ததால் ஏற்பட்ட தீவிபத்தில் பலியானோர் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

பங்காளதேஷ தலைநகர் டாக்காவின் வடபகுதியில் உள்ள டோங்காவில் பொருட்களை பொதி செய்யும் பெட்டிகளை தயாரிக்கும் பேக்கேஜிங் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் காலை வழக்கம் போல் உற்பத்தி தொடர்பான வேலைகள் நடந்து வந்தன.

காலை சுமார் 6.15 மணியளவில் இங்குள்ள ஒரு இராட்சத கொதிகலன் (பொதி) திடீரென வெடித்து சிதறியது. இதையடுத்து, நான்கு மாடிகளை கொண்ட அந்த தொழிற்சாலையில் மளமளவென தீ பரவியது. உள்ளே இருந்த தொழிலாளர்கள் பீதியால் அலறியபடியே உயிர்பயத்துடன் வெளியே ஓடி வந்தனர்.

அவர்களில் பத்து பேர் தீயில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் அடுத்தடுத்து 11 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மேலும் ஏராளமானோர் பலத்த தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தீவிர சிகிச்சை பெற்று வந்த 5 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் உயிரிழப்பு 26 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 74 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 10 பேரின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த தீ விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காக காசிப்பூர் நிர்வாக ஆட்சியில் ரேகனல் தலைமையில் 5 அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் அறிமுகம் செய்தபோதிலும் ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளர்கள் இறப்பது தொடர்கிறது. கடந்த ஆண்டு 13 பேர் இறந்தனர். 2012 ஆம் ஆண்டு 112 தொழிலாளர்கள் இறந்தனர். 2013 ஆம்ஆண்டு ராணா பிளாசா கார்மென்ட் வளாகம் இடிந்து விழுந்ததில் 1135 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

தெல்லிநகர்த் துர்க்கை அம்மனை சித்திரத் தேரில் தரிசிக்க வாரீர்

நம் ஈழத்திருநாட்டில் கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலே அருளாட்சி புரியும் திருத்தலம் தெல்லி நகர் துர்க்கை அம்மன் கோவில் முந்நூறு ஆண்டுகால வரலாறு கொண்ட வழிபடும் தெய்வம் துர்க்கை அம்மன். இவ்வாலயம் சமயப் பணிகளோடு நின்று விடாது சமுதாயப் பணிகளால் பெருமை பெற்று விளங்குகின்றது.

சிவாலயங்கள் அனைத்திலும் மூன்றாவது மண்டபத்தில் வடகிழக்கு கோஷ்டத்தில் துர்க்கை அம்மன் ஸ்தாபித்து வழிபடும் மரபு உண்டு. தேவி மகாம்மிய நூலின் துர்க்கை அம்மன் வழிபாட்டின் மகிமை பேசப்படுகின்றது. அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்பதற்கமைய வழிபடும் அடியார்களின் கூட்டம் எண்ணில் அடங்காதது.

துர்க்கை அம்மன் சந்நிதானத்தில் அபிராமி அந்தாதிப் பாடல்கள் நூறும் பாட வேண்டும். பரவ வேண்டும் என்பது சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் பேரவா. இதற்கமைய துர்க்கை அம்மன் கோவில் பஞ்சபுராணத்துடன் அபிராமி அந்தாதி பாடல் ஒன்று பாட ஆவன செய்தார். மேலும் அபிராமி அந்தாதியை அறிமுகம் செய்த அம்மையார் அந்தாதி பாடல்களை அச்சிட்டு வெளியிட்டார். இத்துடன் அபிராமி அந்தாதிக்கு உரை செய்த உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளைப் புலவரின் உரையைத்தழுவி சிற்றுரை எழுதியுள்ளார் சிவத்தமிழ் செல்வி அம்மையார்.



அபிராமிப்பட்டர் பாடிய வரலாறு அடியார்கள் அனைவருக்கும் அறிந்ததே. நம் நாட்டில் ஏற்பட்டுள்ள துன்ப துயரங்கள் நீங்க அர்த்தம் நிறைந்த பாடல்களை அம்பாள் சந்நிதானத்தில் படிப்போம்.

தேர்த்திருவிழா பஞ்சகிருத்தியங்களில் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. இதனை திரிபுர தகனம் என்கின்றதுசைவசித்தாந்தம். தேர்த்திருவிழாவிலே தேங்காய் உடைத்தல், சிவப் புச்சாத்துதல், சறுக்குக்கட்டை போடுதல், வடம் பிடித்தல், பச்சை சாத்துதல் போன்றன எல்லாம் அர்த்தம் மிகுந்தவை ஆகும்.

துர்க்கை அம்மன் வரலாற்றில் மஹோற்சவம் 1968 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது.கட்டுத்தேர் கட்டிப் பவனி வந்த துர்க்கை அம்பாள் 1978 ஆம் ஆண்டுமுதல் சித்திரத் தேரில் பவனி வருகின்றாள். இந்தச் சித்திரத் தேரை உருவாக்கிய குரும்பசிட்டி கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் கவின் கலைக்கு ஓர் கலாகேசரியாகவும் மரத்துக்கு உயிர் கொடுக்கும் பிரமாவாகவும் விளங்கியவர். தலைசிறந்த கோயில்களுக்கெல்லாம் சித்திரத் தேர்கள், மஞ்சம், கைலாச வாகனம், தெய்வ ஊர்திகள் செய்து பெரும்புகழ் பெற்றவர். இவரை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ளாமல் விட முடியாது.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் வியத்தகு பணிகளால் பெருமை பெற்றது இத்தலம். உலகப் பொது விழாவான திருத்தேர் விழாவைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு கொற்றவைத் தெய்வமான துர்க்கை அம்மன் திருவருள்பொழிய பிரார்த்தனை செய்வோமாக.

கா.சிவபாலன்

வல்லமையைத் தாருமம்மா வஞ்சகரை ஒழிப்பதற்கு

தெல்லி நகரிலிருந்து இந்தத் தேசமெல்லாம் ஆள்பவளே
வல்லமைமிக்க எங்கள் தங்கம்மாவின் தாயே
எல்லையில்லாத் துன்பத்தால் எந்நாளும் துடிக்கின்றோம்
ஏந்திழையே பார்க்கின்றாய் இரக்கம் உனக்கில்லையோ
புல்லர்கள் புகுந்தன்று பொதி செய்த நகையனைத்தும்
மெல்ல உன் வாசலில் வைத்து அற்புதஞ் செய்தவளே
சொல்லரிய அழகுத் தேரில் சுந்தரியே இன்று வந்து
வல்லமையைத் தாருமம்மா வஞ்சகரை ஒழிப்பதற்கு

கவிமணி அன்னைதாஸன்
ஊரெழு.

நல்ல தீர்வினைத் தந்தருள தேரேறி வருகிறாள் துர்க்காதேவி

தெல்லியூர் பதிதனில் மேவும் துர்க்காதேவியே!
அடியவர்க்கு அருள் மழை பொழிந்திடும்
அன்னை துர்க்கா தேவியே அகந்தையை
போக்கி நல் ஆற்றலைக்கொடுக்கும் துர்க்காதேவியே
மங்கையர்க்கு நல் மணவாழ்வளித்திடும் துர்க்காதேவியே
வடம் பிடித்து இழுக்கிறோம் அம்மா
உந்தன் வாயில் வந்து, நானிலத்தில் எம் துயர் கூறிட
உம்மையன்றி யாருளர் அம்மா
தமிழர்க்கு நல்லதொரு தீர்வினைத் தந்தருள
தேரேறி வருகிறாள் துர்க்காதேவி.

நயினை–வீசு–ரசநாயகம்

அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலைக்கு அதிபர் விடுதி அமைப்பதற்கான கட்டட அடிக்கல் நாட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் சு. கிருஷ்ணகுமார் தலைமையில் காலை 9.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமய அனுஷ்டானங்களைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், வி.சிவயோகன், கே.தர்மலிங்கம், வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான யோ.இரவீந்திரன், இ.தமிழ்மாறன், திருமதி அ.பார்த்தீபன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.கே.யோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். இவ் வைபவத்தில் பாடசாலை முன்னாள் அதிபர்கள், அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

சு.கவுடன் இணைந்து போட்டியிட த.தே.கூட்டமைப்பு விருப்பம்

மேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பத்துடன் காணப்படுவதாக மேல் மாகாண சபை முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

டக்ளஸ் தேவானந்தா எம்முடன் இணைந்து கொண்ட போது, அன்றைய இரவே, த.தே. கூட்டமைப்பு தலைவர் ஜனாதிபதியிடம் தொடர்பு கொண்டு, ஏன் டக்ளஸ் தேவானந்தாவை சேர்த்துள்ளீர்கள் என வினவியுள்ளார்.

த.தே.கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அடுத்த தேர்தலில் போட்டியிட விருப்பத்துடன் உள்ளதெனவும் அக் கட்சியின் தலைவர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீல.சு. கட்சியின் பங்காளிக் கட்சியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்கலாம் என வும் முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

ஹெரோயினுடன் 11 இளைஞர்கள் கைது

கம்பஹா வெலிவேரிய பிரதேசத்தில் 11 இளைஞர்கள் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வசம் காணப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 3 இலட்சம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் வெலிவேரிய மற்றும் கொழும்பு பிரதேசங்களை சேர்ந்த 20-30 வயதுடைய இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 09 பேர் கம்பஹா நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய இருவரும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக வெலிவேரிய பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

புதிய அரசியல் யாப்பு தொடர்பான பொய்ப்பிரசாரங்களை தவிர்க்கவும்

ஜனாதிபதி மைத்திரி வேண்டுகோள்

இலங்கையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியல் யாப்பு சம்பந்தமாக தவறான பிரசாரங்கள் மேற்கொள்வதை தவிர்க்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஜக்கிய தேசியக் கட்சியின் 70 ஆவது வருடாந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி, தான் ஜனாதிபதியாகுவதற்கு ஜக்கிய தேசியக் கட்சி முக்கிய பங்களிப்பினை வழங்கியதாகத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் ஐ.நாவினால் ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்க முடியாமை காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திடீர் தேர்தல் ஒன்றை நடத்தி தோல்வி கண்டதாக தெரிவித்தார்.

ஆனால், ஜக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒன்று சேர்ந்து உருவாக்கிய தேசிய அரசாங்கம் இந்த சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டைக் காக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

சகல மக்களுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கு ஆளும் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி அது சம்பந்தமாக சில குழுக்கள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு தவறான பிரசாரங்களை மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7-10)

வாக்கு உங்கள் உரிமை-மகிந்த

"வாக்கு உங்கள் உரிமை" எனும் தொனிப் பொருளின் கீழ் சர்வஜன வாக்குரிமை குறித்து மக்களுக்கு தெளிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உலக ஜனநாயக தினம் நிகழ்வுகள் எதிர்வரும் வியாழக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும். இது தொடர்பான விசேட வேலைத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இதன்போது தெளிவுபடுத்தப்படவுள்ளது.

ஆதிவாசிகள் மற்றும் வீதியில் வசிக்கும் மக்களுக்கும் வாக்குரிமையை பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-7-10)

இன்று ஒரு தகவல்

அன்புத் தொல்லைகள்

நமக்கு எதிரிகள் தரும் தொல்லைகள் போதாதென்று நமக்கு மிக வேண்டியவர்கள் வேறு தொல்லைகள் தருவார்கள்.

இதைத் தான் அன்புத் தொல்லை என்கின்றோம்.

நாம் அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருப்போம். உள்ளே நுழைந்து, என்ன விடயம் அப்புறம் என்பார்கள் சாவகாசமாக.

நாமே ஐம்பது நூறுக்கு அல்லாடிக் கொண்டிருக்கும் போது , அவசரம் அற்ற செலவு ஒன்றைச் சொல்லிப் பணம் கேட்பார்கள்.நம் சூழ்நிலையையும் நம் அருமையையும் புரிந்து கொள்ளலாம் நடத்து கொள்வார்கள். சிலர் புரிந்தும் தொந்தரவு தருவார்கள்.

தங்கள் ஊருக்குத் திரும்ப ரயில்- பஸ் டிக்கெட்புக் செய்யச் சொல்வார்கள்.கடைசி நிமிடம் வரவில்லை என்பார்கள். மாங்கு மாங்கென்று போய் டிக்கெட்டைக் கான்சல் செய்யும் போது, அதற்காக ஒரு தொகையைப் பிடித்துக் கொள்ளும் போதும், நமக்கு எரிச்சல் எரிச்சலாக வரும்.

வயிற்றில் கடுகை இறக்கக் கூட இடமில்லை என்னும் அளவிற்குச் சாப்பிட்டிருப்போம்.கண்டகண்டதைக் கொண்டு வந்து வைத்துச் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்பார்கள்.

அசையக் கூட முடியாமல் படுத்துக் கிடப்போம். வா டாக்டர் வீட்டுக்குப் போவோம் என்பார்கள். என்னால் முடியாது என்று எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அங்கே போயிட்டுவா...இங்கே போயிட்டு வா; அதை எடு ..இதைத் தூக்கு என்று இல்லாத பொல்லாத உடற் சிரமங்களையெல்லாம் தருவார்கள்.அப்படியே பற்றிக் கொண்டுவரும்!

மேலோட்டமாக எண்ணும் போது இத்தகைய செயல்கள் எரிச்சல் தரக் கூடியவை தாம். ஆனால், சற்று ஆழ்ந்து பார்த்தால் நம் எரிச்சல் அந்த அளவுக்கு அர்த்தமில்லாதது என்பது தெரியவரும்.

நமக்கு அன்புத் தொல்லை தருகிறவர்களிடம் நாம் நன்கு உரிமை எடுத்துக்கொள்ள முடியும் என்பது உற்சாகமான விடயம்.

தோழமை உணர்வோடும், பரந்த மனத்தோடும், பெரும்பாலும் சுயநலம் இன்றியும் நம் நன்மைக்காகவும் தரப்படும் தொல்லைகளை, நாம் அன்பின் பொருட்டுப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ரயிலில் சாப்பிடுங்க என்று உணவுப் பொட்டலம் கட்டித்தந்தால் வாங்கிக் கொள்ளுங்கள் –அவர்கள் காணாத போது தூக்கிக் குப்பைத் தொட்டியிலாவது எறியுங்கள். தவறு என்று சொல்லவில்லை. ஆனால் மனம் புண்படும் படி வேண்டாம் என மறுத்து விடாதீர்கள்.

எந்த ஒரு செயலிலும் அவர்கள் நம்மிடம் எடுத்துக் கொள்ளும் உரிமைக்காக நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டுமே தவிர, குதிக்கக் கூடாது. ஒவ்வொரு செயலையும் எக்ஸ்ரே போட்டுப் பார்த்து உள்ளே தெரியும் அன்புக்காக நாம் மகிழ வேண்டும். முடியவில்லையா? பொறுத்துக் கொள்ளவாவது வேண்டும்.

அன்புத் தொல்லையை தொல்லையாகவே எண்ணக் கூடாது. எண்ணினால் அங்கு அன்பு குறைகிறது என்று பொருள். இது நல்லதல்லஏன்அதுகுறைகிறது என்பதைஉடனடியாகப் பரிசீலித்துச் சரி செய்ய வேண்டும்.

பழுதடைந்த கட்டத்தைச் சரி செய்ய முயல வேண்டுமே தவிர , அவசரப்பட்டு இடித்துத் தள்ளிவிடக் கூடாது.

லேனா தமிழ்வாணன்

வடக்கு பாடசாலைகளுக்கு ஜப்பான் நிதியுதவி

வடக்கு பாடசாலைகளுக்கு ஜப்பான் உலக உணவு நிகழ்ச்சி நிரலின் உணவுத வித் திட்டத்தின் மூலம் 230 மில்லியன் யென் இலங்கை மதிப்பில் (சுமாராக 330 மில்லியன் ரூபா) வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதே திட்டம் மூலம் 2012 இல் இருந்து 2015 வரையில் ஜப்பானிய அரசு 740 மில்லியன் யென் தொகையை பாடசாலைப் பிள்ளைகளின் உணவுக் காக வழங்கியிருந்தது.

இவ்வாறு வடக்கிற்கு புதி தாக உணவு வழங்கும் திட் டத்திற்கான ஒப்பந்தம் கடந்த 9 ஆம் திகதி கைச் சாத்திடப பட்டது.

குறித்த நிகழ்வில் ஜ.நா. உலக உணவுத் திட்டப் பிரி விலிருந்து ஒரு அதிகாரியும், ஜப்பானின் பிரதிநிதி ஒரு வரும் இலங்கைக்கான பிரதி நிதி ஒருவரும் இதன்போது சமுகமளித் திருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

எக்னெலிகொட காணாமற்போன வழக்கு

இறுதி அறிக்கை சட்டமா அதிபரிடம்



கைதானவர்கள் மீது கொலை வழக்கு

(கொழும்பு)

ஊடகவிலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பான வழக்கு விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களம் நிறைவு செய்துள்ள அதேவேளை சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் வகையில் இரண்டு வாரங்களுக்குள் விசாரணையின் இறுதி அறிக்கை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

பிரகீத் எக்னலிகொடவை கடத்தி, கொலை செய்த குற் றச்சாட்டில் தடுத்து வைக்கப் பட்டுள்ள எட்டு இராணுவ புலனாய்வு உறுப்பினர்களுக் கும் எதிராக கொலைக் குற்றச் சாட்டு பதிவுசெய்வதற்கு போது மான ஆதாரங்கள் உள்ள தாக மூத்த புலனாய்வு அதி காரியொருவரை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை கடந்த செவ் வாய்க்கிழமை எக்னெலிகொட வழக்கு விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் தரப்பு சார்பில் ஹோமாகம நீதவான் ராங்க திஸாநாயக்க முன் முன்னிலை யான மூத்த அரச தரப்பு சட்டத்தரணி தீலிப்ப பீரிஸ், சார்ஜன் பிரேமானந்த உதல்லா கமவின் வழிகாட்டலில் எக் னெலிகொட கடத்தப்பட்டமை குற்றப்புலனாய்வு பிரிவின ரின் விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக குறிப் பிட்டிருந்தார்.

தனியார் தொலைபேசி நிறுவனங்களிடம் இருந்து பொலிஸாரால் பெற்றுக் கொள் ளப்பட்ட தொலைபேசி கலந்து ரையாடல்கள் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ரிவிர பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசியரி யர் உபாலி தென்னக்கோன் 2009 ஆம் ஆண்டு கடத்தப் பட்டமை தொடர்பான வழக் கில் பிரதான சந்தேகநபராக, சார்ஜன் பிரேமானந்த உதல்லா கம பெயரிடப்பட்டிருந்தது டன், உபாலிதென்னக்கோனால் அவர் அடையாளம் காட்டப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (இ-7-10)

நாமலுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

பாராளுமன்ற உறுப்பி னர் நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கையின் அடிப்படையில் கட்சி உறுப்புரிமை இல்லா மல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த பிரேரணை கள் எதிர்வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முன் வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பி னர் ஒருவர் இதனை தெரி வித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

கட்சியையும், கட்சித் தலைவரையும் நாமல் ராஜ பக்ஷ தொடர்ந்தும் விமர்ச னம் செய்து வருகின்றார்.

அத்துடன், அவருக்கு எதி ரான ஊழல் மோசடி குற்றச் சாட்டு என்பனவற்றை அடிப் படையாகக் கொண்டு இந்தப் பிரேரணை முன்வைக்கப் படவுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, நாமல் ராஜ பக்ஷ கட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் விதத்தில் தொடர்ந் தும் செயற்பட்டு வந்துள்ள தாக கூறப்படுகின்றது.

அத்துடன், அவருக்கு எதி ராக முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானது எனவும் அவர்

தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ-7-10)

செய்திச்சுருக்கம்

சந்நிதி ஆலயச் சூழலில் இன்று

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிகழ்வில் இன்று 12 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் நல்லைஜி.கண்ணதாசன் குழுவினரின் இசைக் கச்சேரி, செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவன் மித்ர காந்தின் பேச்சு, மாணவி ஜோதிகா உதஜராயனின் பேச்சு என்பன இடம்பெறும். (இ-7)

'பத்தினிக்கு பாலமுத பாட்டு' இறுவெட்டு வெளியீட்டு விழா

கந்தர்மடம் - மணல்தறை வீதி, அருள்மிகு கண்ணகை அம்பாள் திருக்கோவில் அலங் கார உற்சவப் பெருவிழாவின் ஆரம்ப நாளான இன்று இரவு 8 மணிக்கு எல்.அகிலனின் கவி வரிகளில் உருவான பத்தி னிக்கு பாலமுத பாட்டு இறுவெட்டு வெளியீட்டு விழா நடைபெறும்.

இவ் விழாவில் பிரதம விருந் தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழக முன்னாள் துணைவேந் தர் சமூகவியல் துறைப் பேரா சிரியர் என்.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக வண்ணைக் கலாநிதி மதுர கவி காரை எம்.பி. அருளானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ள னர். (இ)

8 மாதத்தில் 334 கொலைகள்

இலங்கையில் கடந்த ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் 334மனிதக்கொலைகள் இடம்பெற்றுள்ளன. 2015ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியில் 443 கொலைகள் இடம்பெற்றதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த வருடத்தில் ஓகஸ்ட் மாதம் வரை இடம்பெற்ற 334 கொலைகளில், 90 கொலைகள் மேல் மாகாணத்தில் இடம்பெற்றுள்ளன. (இ-7-10)

35இலட்சம் வாடகை செலுத்தும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

செலின்கோ நிறுவனத்தின் 3 மாடிக் கட்டடத்துக்கு இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சானது மாதாந்தம் 35 இலட்சம் வாடகையை செலுத்தி வருவதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு ஸ்ரீமத் பாரோன் ஜயதிலக மாவத்தையில் தற்போது வெளிநாட்டலுவல்கள்அமைச்சு இயங்கி வரும் அலு வலகத்தை குறித்த செலின்கோ நிறுவன கட்டடத்திற்கு மாற்று வதற்காக இந்த கட்டடம் பெறப்பட்டுள்ள போதும் கடந்த 4 மாதங் களாக இது பயன்படுத்தப்படாமல் வாடகை மாத்திரம் வழங் கப்பட்டு வருவதாகவும் இதன்மூலம் தேசிய பணமானது அழிக்கப் படுவதாகவும் தெரிவித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

ஒரு நாள் பயிற்சிப்பட்டறை

மகரந்தச் சேர்க்கை மேற்கொள்ளும் உயிரினங்கள் பற் றிய தெளிவூட்டலுக்கும் அவற்றின் பாதுகாப்பிற்குமான வலுவூட்டலுக்குமான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை தென்மராட்சி வலய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்காக சாவ கச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

மகரந்தச் சேர்க்கை மேற்கொள்ளும் உயிரினங்கள் பற்றி யும் சுற்றாடலில் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விழிப் புணர்வினை ஏற்படுத்துவதற்கான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சகத்தின் உயிர்ப் பல்வகைமை செயலகத்தினால் யாழ். பல்கலைக்கழக விலங்கியற் துறை சார் வல்லுநர்களுடன் இணைந்து இந்தப் பயிற்சிப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனநாயகத்துக்கான ஆர்ப்பாட்டக்காரர்களின் பொதுக்கூட்டத்தில் இலங்கையின் பல்வேறு இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

காலபோக பயிர்ச்செய்கை உரமானியத்துக்கான பணம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

உதவி ஆணையாளர் தகவல்

யாழ். மாவட்டத்தில் 2016- 2017 காலபோக பயிர்ச் செய்கை உரமானியத்துக்கான பணம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் நிசாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 2016 - 2017 காலபோக பயிர்ச் செய்கை உரமானியத்துக்குரிய பணத்தினை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நெற்செய்கைக்கான உரமானிய பணத்தினை பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்பவர்கள் அதற்கான (P) விண்ணப்பப்படிவத்தினையும், உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோளம், சோயா ஆகிய பயிர்களுக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள் (H) விண்ணப்பப்படிவத்தினையும் தங்களது பயிர்ச்செய்கை காணிப்பரப்பு எந்த கமநல சேவைகள் நிலைய அதிகாரப்பிரிவின் கீழ் வருகிறதோ அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களை உண்மையான தகவல்களால் பூரணப்படுத்தி உரிய கமக்கார அமைப்பினது சிபாரிசுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அதே விண்ணப்பப்படிவத்துடன் கடவுச் சீட்டு அளவினான புகைப்படம் ஒன்று, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளில் ஏதேனுமொன்றில் தற்போது பாவனையில் உள்ள வங்கிக்கணக்கு புத்தகத்தின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பவற்றை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் மேட்டுக்காணிக்கான உரமானிய பணம் மேற்குறிப்பிட்ட பயிர்களை பயிரிடுபவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் என்பதோடு அதி உச்ச எல்லையாக 2.5 ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா வரை பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோன்று நெல்லிற்கான உரமானிய பணம் அதி உச்ச எல்லையாக 5 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா வரையும் பெற்றுக் கொள்ளலாம். இருப்பினும் நபர் ஒருவர் மேட்டுக் காணிக்கான உரமானிய பணம் அல்லது நெல்லிற்கான உரமானிய பணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றுக்கு மாத் திரமே விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் தென்னை பயிர்ச் செய்கைக்கான உரமானிய பணத்தினை பெற்றுக் கொண்ட நபரொருவரும் மேற்படி இரண்டு பயிர்ச் செய்கைக்குமான உரமானிய பணத்தினை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க தகைமையற்றவர் என்பதனையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

இருப்பினும் 2015 - 2016 காலபோகத்தில் நெல்லிற்கான மானிய உரம் பெற்று பயிர்ச்செய்கை மேற் கொண்ட நெற்காணிப் பரப் பில் 2016 சிறுபோகத்தில் வேறு ஏதேனும் பயிர்செய்கையினை மேற்கொண்டு உரமானிய பணத்தினை பெற்றுக்கொண்ட விவசாயிகள் இப்போகத்தில் நெல்லுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

பாதாள உலகக் குழுவின் உதவியுடன் மலேசியாவில் தூதுவர்மீது தாக்குதல்

பாதாள உலகக்குழுவின் உதவியுடன் தான் இலங்கை உயர்ஸ்தானிகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்சார் மீது அண்மையில் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்கள் வழிநடத்தியதாகவும் அந்நாட்டு பாதாள உலகக் குழுவின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் புலனாய்வு பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பினாங் மாநிலத்தின் முதலமைச்சர் பீ. ராமசாமியின் ஆதரவாளர்களான ஸீரோ தெர்டீன்ஸ் என்னும் பாதாள உலகக்குழுவினரின் ஒத்துழைப்புடன் உயர்ஸ்தானிகர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டில் மட்டக்களப்பிலிருந்து மலேசியா சென்ற இரண்டு புலி செயற் பாட்டாளர்கள் இந்தப் பாதாள உலகக்குழுவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தின் நாம் தமிழர் கட்சி, புலிகளின் சிரஞ்சீவி மாஸ்டர் தலைமை யிலான குழுவினர் மற்றும் நெடியவன் தரப்பினர் ஆகியோரும் இந்த தாக்குதலுடன் தொடர்புபட்டிருப்பதாக இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. (இ-7-10)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 833

Search for people, places and things Nagendram Home

ரிசி



குண்டுமணி



சிந்து



ரோசி

ஜோசியர்: உங்க ஜாதகப்படி, பத்து வருடத்துக்கு முன்னாடி செய்த வியாபாரத்தை இப்ப தலைகீழா செய்யணுமே?
வந்தவர்: ஆமாங்க.. முன்னாடி வைர வியாபாரம் செஞ்சேன்; இப்ப ரவை வியாபாரம் செய்யறேன்!

பகிர்தா



திவா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

சமயோசித யுத்தியால் உயிர் தப்பிய நாய்

நாய், சிறுத்தை, குரங்கு

ஒரு காட்டில் காட்டுநாய் ஒன்று சுற்றித் திரிந்து கொண்டு இருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப்புலி தன்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்ததை அந்த காட்டுநாய் பார்த்தது.

நாயை பிடித்து தின்ன வேண்டும் என்பதுதான் சிறுத்தைப்புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பி செல்வது என்பது காட்டு நாயின் கவலை.

ஓடிச்செல்வதால் பயனில்லை. ஏனென்றால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப்புலியின் அளவுக்கு காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது.

எனவே காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்க தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றை பார்த்தும் உடனே அந்த காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப்புலியின் பக்கம் தன் முதுகை திருப்பிக்கொண்டு கீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பது போல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப்புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்கு தயாரானபோது காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது.

"இப்போது நான் தின்று முடித்த சிறுத்தைப்புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப்புலி கிடைக்குமா? என்று தேடிப்பார்க்க வேண்டும்" என்றது.

இதைக் கேட்டதும் பயந்து போய் சிறுத்தைப்புலி அப்படியே ஸ்தம்பித்து சிலைபோல் நின்று விட்டது.

இந்த காட்டு நாய் சிறுத்தைப்புலிகளையே கொன்று தின்று விடுகிறதே. அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். இதனிடம் அகப்படாமல் தப்பி சென்றுவிட வேண்டும் என்று நினைத்து ஓசைப்படாமல் பின்னோக்கி சென்று அந்த சிறுத்தைப்புலி புதருக்குள் மறைந்துவிட்டது.

அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது. தனக்கு தெரிந்த தகவலை சிறுத்தைப்புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப் புலியுடன் பேரம் பேசி தனக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது.

எனவே சிறுத்தைப்புலியைப் பின் தொடர்ந்து அந்தக்குரங்கு வேகமாக ஓடிச்சென்றது. காட்டு நாயும் இதை கவனித்தது. ஏதோ சதி நடக்கிறது என பதை புரிந்துக்கொண்டது.

குரங்கு, சிறுத்தைப்புலியிடம் சென்று காட்டு நாய், சிறுத்தைப்புலியை எப்படி ஏமாற்றியது என்ற முழு விவரத்தையும் சொன்னது. சிறுத்தைப்புலிக்கு தாங்க முடியாத கோபமும், ஆத்திரமும் வந்தது.

அந்த காட்டு நாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா? அதற்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுகிறேன்.

"இந்த காட்டில் யார் யாரை கொன்று தின்பார்கள் என்பதை காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு, "குரங்கே வா. என் முதுகில் ஏறி உட்கார். 2 பேரும் அந்த காட்டு நாயைப் பிடிக்கலாம்" என்றது. குரங்கு, சிறுத்தைப் புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது.

இரண்டும் நாயை நோக்கி சென்றன. சிறுத்தையும், குரங்கும் சேர்ந்து வருவதை காட்டு நாய் பார்த்தது. இந்த திருட்டு குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டதே இப்போது என்ன செய்வது? என்று அந்த காட்டு நாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற காக அந்த காட்டு நாய் பயந்து ஓடவில்லை.

அந்த சிறுத்தையையும், குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவைகளுக்கு தன் முதுகை காட்டிக்கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்த காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது.

"அந்த போக்கிரி குரங்கு எங்கேபோய் தொலைந்தது. அதனை நம்பவே முடியாது. நான் இன்னொரு சிறுத்தைப் புலியை சாப்பிடுவதற்கு பிடித்துக்கொண்டுவா என்று சொல்லி அனுப்பி அரை மணிநேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்த குரங்கை காணோமே?" என்றது.

காட்டு நாய் சொன்னதை கேட்ட சிறுத்தைப்புலி தன் கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது. அதனை கடித்துக் குதறி கொன்று தின்று விட்டது.

இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2016 12

- கிமு 490 - கிரேக்கம் மரதன் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் பாரசீகத்தைத் தோற்கடித்தது. பிடிப்பிடஸ் என்ற கிரேக்க வீரன் இவ்வெற்றிச் செய்தியைத் தெரிவிக்க நெடுந்தூரம் ஓடினான். மரதன் ஓட்டப்போட்டிக்கு இதனாலேயே இப்பெயர் இடப்பட்டது.
- 1609 - ஹென்றி ஹட்சன் ஹட்சன் ஆற்றைக் கண்டுபிடித்தார்.
- 1848 - சுவிட்சர்லாந்து கூட்டமைப்பு ஆட்சியை நடைமுறைப்படுத்தியது.
- 1857 - வட கரொலைனாவில் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 426 பேர் கொல்லப்பட்டனர். இக்கப்பலில் 13-15 தொன் தங்கம் கொண்டு செல்லப்பட்டது.
- 1933 - அணுக்கரு தொடர்வினை குறித்த கருத்தை முதன் முதலாக லியோ சிலார்ட் அறிவித்தார்.
- 1940 - நியூ ஜேர்சியில் தொழிற்சாலை ஒன்றில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 51 பேர் கொல்லப்பட்டு 200 பேர் காயமுற்றனர்.
- 1948 - முகமது அலி ஜின்னா மறைந்த அடுத்தநாள் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் ஜதராபாத் மாநிலத்தினுள் நுழைந்தது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லபபட்டனர்.
- 1953 - நிக்கிட்டா குருசேவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1959 - லூனா 2 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் ஏவியது. சந்திரனை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1980 - துருக்கியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1992 - நாசாவின் எண்டெவர் விண்ணோடம் கருப்பு-அமெரிக்கப் பெண்ணான மேய் சரோல் ஜமிசன் என்பவருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2001 - ஆஸ்திரேலியாவின் மாநிலங்களுக்கிடையேயான முதலாவது பயணிகள் போக்குவரத்து விமான சேவையான ஆன்செட் ஆஸ்திரேலியா மூடப்பட்டது. 10,000 பேர் வேலையிழந்தனர்.
- 2005 - இஸ்ரேல் காசாப் பகுதியில் இருந்து தனது படைகளை முற்றாக விலக்கியது.
- 2005 - ஹொங்கொங்கில் ஹொங்கொங் டிஸ்னிலாண்ட் திறக்கப்பட்டது.
- 2006- திருத்தந்தை பதினாறாம் ஆசீர் வாதப்பர் ஜேர்மனியில் நிகழ்த்திய உரையின் போது "தீங்கு விளைவிக்கிற மற்றும் மனிதத் தன்மையற்ற விடயங்களையே நபிகள் நாயகம் இவ்வுலகிற்கு அளித்தார்" என்று தெரிவித்தார். இதற்கு இஸ்லாம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து திருத்தந்தை மன்னிப்புக் கேட்டார்.

பிறப்புக்கள்

- 1832 - சி. வை. தாமோதரம்பிள்ளை, தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி. (இ. 1901)
- 1913 - ஜெசி ஓவென்ஸ், அமெரிக்க தட கள ஆட்டக்காரர். (இ. 1980)
- 1943 - மைக்கல் ஒண்டாச்சி, இலங்கையில் பிறந்த எழுத்தாளர்.
- 1969 - கப்டன் மொறிஸ், விடுதலைப் புலிகளின் போராளி. (இ. 1989)
- 1980 - யாவ் மிங், சீனக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

இறப்புகள்

- 1612 - நான்காம் வசீலி, ரஷ்யப் பேரரசன். (பி. 1552)
- 2009 - நார்மன் போர்லாக், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். (பி. 1914)

சிறப்பு நாள்

- கேப் வேர்ட் - தேசிய நாள்.
- எதியோப்பியா - தேசியப் புரட்சி நாள் .(1974)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	கொடிகாமம்	சுன்னாகம்	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	50	40	50	60	60
உருளைக்கிழங்கு	100	100	85	100	100	100
பச்சைமிளகாய்	80	100	65	70	120	80
தக்காளி	80	50	55	50	80	40
மரவள்ளிக்கிழங்கு	100	50	70	100	50	80
கோவா	80	50	55	100	80	80
கரட்	80	100	80	120	120	100
பூசணி	40	20	20	40	40	40
புடோல்	50	20	20	35	50	50
வாழைக்காய்	80	100	60	80	80	80
சின்ன வெங்காயம்	100	100	85	100	100	70
பெரிய வெங்காயம்	100	100	80	120	100	100
பாகற்காய்	80	100	60	160	120	100
வெண்டிக்காய்	60	40	40	80	100	80
கருணைக்கிழங்கு	100	40	—	120	120	100
பயற்றங்காய்	40	40	30	50	60	60
லீக்ஸ்	140	100	80	120	120	120
பீற்றூட்	50	40	35	40	60	40
கறிமிளகாய்	100	100	80	100	120	100
முருங்கைக்காய்	160	200	140	200	160	150
போஞ்சி	180	200	140	160	200	160
கத்தரிதம்புள்ள	30	20	30	50	50	50
கீரை - 1 பிடி	20	20	30	40	20	30
தேசிக்காய்	250	300	220	300	200	160
தேங்காய் (ஒன்று)	40	50	15-30	50	20-30	40
இராசவள்ளி	—	—	—	—	—	170
வெங்காயப்பூ	120	—	—	160	200	160
முள்ளங்கி	60	20	25	40	50	40
பொன்னாங்காணி	30	40	10	30	40	25
வல்லாரை	10	10	10	10	20	15
ஈரப்பலா	60	20	30	50	80	70

புதிய நிதி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படாது!

மத்திய வங்கி அறிவிப்பு

புதிய நிதி நிறுவனங்களுக்காக எதிர்வரும் காலத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதனடிப்படையில், தற்போது காணப்படும் நிதி நிறுவனங்களின் அனுமதி பத்திரங்களுக்கு உயர் மதிப்பு கிடைக்கும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதனால், குறித்த நிறுவனங்களுக்கு புதிய முதலீட்டாளர்களை ஈர்க்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தற்போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நிதி நிறுவனங்களுக்கு மூலதனத்தினை தேடிக்கொள்வதற்கான வாய்ப்பாக அமையும் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

யூனியன் அஸ்யூரன்ஸ் உறுதியான வளாச்சி

காப்புறுதி வியாபாரத்தில் யூனியன் அஷ்யூரன்ஸ் உறுதியான போக்கை பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் மொத்த தேறிய தவணைக்கட்டண வழங்கல்களில் 22 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்ததுடன், இந்தப் பெறுமதி 3.9 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது. 2015-ல் பதிவாகிய 1.5 பில்லியன் ரூபாய் இலாபத்துடன் ஒப்பிடுகையில் 119 மில்லியன் ரூபாய் நடப்பு ஆண்டில் பதிவாகியிருந்தது. கடந்த ஆண்டின் இலாப பெறுமதி என்பது, பொது காப்புறுதி வியாபாரத்தின் 78 சதவீதமான பங்குகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமை காரணமாக, பெருமளவு அதிகரித்திருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல்களைத் தவிரத்து, குறித்த காலப் பகுதியில் இலாபம் என்பது முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது. 2016 ஜூன் மாதத்துடன் நிறைவடைந்தக் காலப்பகுதிக்கான ஆயுள் காப்புறுதி வியாபாரத்திலிருந்து கிடைக்கும் மேலதிக பெறுமதி என்பது கணக்கிடப்படவில்லை. இந்தப் பெறுமதி வருட இறுதியில் ஒன்று திரட்டி கவனத்தில் கொள்ளப்படும். 2016 ஜூன் 30ஆம் திகதியன்று, நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதி நிதியத்தின் பெறுமதி ரூ. 28 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. இது ஆரோக்கியமான மூலதன போதுமை விகிதத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன், வியாபாரத்தின் நிதி உறுதிப்பாட்டையும் பிரதிபலித்திருந்தது. தொடர்ச்சியான 4-வது ஆண்டாக Great Places to Work நிறுவனத்தினால் பணியாற்றுவதற்கு சிறந்தப் பணியிடங்களில் ஒன்றாக யூனியன் அஷ்யூரன்ஸ் தெரிவாகியுள்ளது.

நேசன்ஸ் ரஸ்ட் முதலீட்டாளர் வாதுக்கூட்டம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் 2016ஆம் ஆண்டுக்கான முதலீட்டாளர் பொதுக்கூட்டம் 6-வது தடவையாகவும் வெற்றிகரமாக ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. 'Stepping up to the Challenge' என்ற தொனிப்பொருளில் நடைபெற்றிருந்த இந்தப் பொதுக் கூட்டம் வங்கியின் 2016-ம் ஆண்டுக்கான முதலாம் காலாண்டின் மூலதன இலாபங்கள் மற்றும் வங்கி பூர்த்தி செய்த ஏனைய மைல்கல்களை முக்கியத்துவப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூலதன ஆலோசகர்கள், பங்குச் சந்தைத் தரகர்கள் மற்றும் நிதி முகாமைத்துவ அதிகாரிகள் போன்ற பலரும் கலந்து சிறப்பித்த இந்தப் பொதுக் கூட்டம் வங்கியின் நீண்ட கால நோக்கு, செயற்திறன்களை மேம்படுத்தும் முறைகள் பற்றியும் கவனிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செலிங்கோ லைப் புலமைப்பரிசில் திட்டம்

செலிங்கோ லைஃப் தொடர்ந்தும் தனது 16 ஆண்டாக பிரானாம புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது.

2017-ம் ஆண்டின் முதற் பகுதியில் வழங்கப்படும் இப்புலமைப்பரிசில் 160 மாணவர்களுக்கு மொத்தமாக 10 மில்லியன் பணத்தொகையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள சுமார் 250க்கும் மேற்பட்ட செலிங்கோ லைப் கிளைகளின் ஊடாக இப் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விண்ணப்பத்தை நவம்பர் மாதம் 30-ம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக 1-ம், 2-ம், 3-ம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு விசேட பணப்பரிசில் தொகையும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாக சிறந்த பெறுபேற்றைப் பெற்ற 25 மாணவர்களுக்கு 120,000 ரூபாய் பெறுமதியானப் பணப்பரிசில் 5 வருடங்களுக்கும், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் வெற்றி பெற்று குறித்த புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ரூ.84,000 2 வருடங்களுக்கும் மற்றும் க.பொ.த உயர்தரம் பரீட்சைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ரூ.144,000 பெறுமதியான பணப்பரிசில் 3 வருடங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

ஹோட்டல் கண்காட்சி

ஹோலா தெரிவுகள்

ஹோட்டல் துறையைச் சேர்ந்த நிபுணர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலா, உணவு மற்றும் பானங்கள் துறையுடன் தொடர்புடையத் தரப்பினர்களின் பங்குபற்றலுடன் 11ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டல்ஷோ 2016 நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. விருந்தோம்பல் துறைக்கான தனது புத்தாக்காமான மற்றும் நவீன அலங்காரத் தெரிவுகளைக் காட்சிப்படுத் தியிருந்தமைக்காக Koala oala (Pvt) Ltd பலரின் பாராட்டுதல்களைப் பெற்றிருந்தது. கண்காட்சியில் பிரதான காட்சியாளராகப் பங்கேற்றிருந்த ஹோலா, தனது சொகுசான மற்றும் பிரத்தியேகமான வர்த்தக நாமத் தெரிவுகளை நாட்டின் முன்னணி ஹோட்டல் தொடர்கள், ஹோட்டல் விநியோகஸ்த்தர்கள் மற்றும் தனியார் நுகர்வோர்கள் மத்தியில் பெற்றிருந்தது.

கடந்த மாதங்களில் வெளிநாட்டு வருமானம் குறைவு

இந்த வருடத்தின், கடந்த மாதங்களில் வெளிநாட்டு வருமானம், கடந்த வருடத்திலும் 5.3 வீதம் குறைந்து பதிவாகியுள்ளது.

இதனை இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார மாற்றங்கள் மற்றும் தொழிலாளர் இயக்கங்களின் குறைப்பு போன்றவையே இதற்கான காரணங்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொமர்சல் வங்கியின் உயர்வான புலமைப்பரிசில்

கொமர்ஷல் வங்கி மேலும் 50 பட்டப்படிப்பு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி அவற்றின் பெறுமதியையும் மேலும் அதிகரித்ததன் மூலம் இலங்கை இளைஞர்களின் கல்விக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவு வழங்குவது என்ற அதன் நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்துள்ளது.

2016 ஆம் ஆண்டு தொடக்கம் வங்கியின் மேற்குறித்த திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்களை பெறுபவர்கள் வருடம் தோறும் 50 ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களது பட்டப்படிப்புக் காலத்தில் வருடாவருடம் அவர்கள் பெற்றுக் கொள்ளும் இந்த புலமைப்பரிசில் பணம் இந்த வருடத்திலிருந்து 20 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்துடன் இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கியிடமிருந்து ஒவ்வாரு மாணவனுக்கும் ஒவ்வொரு மடிக்கணினியும் வழங்கப்படுகிறது.

இவ்வருடம், வங்கியின் கொழும்பு யூனியன் பிளேஸ் கிளையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து 7 பல்கலைக்கழகங்களின் பட்டதாரி மாணவர்கள் அவர்களது புலமைப்பரிசில்களை பெற்றுக் கொண்டனர். இந்த வருட பரிசளிப்புடன் கொமர்ஷல் வங்கியிடமிருந்து புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களது தொகை 350 ஆக அதிகரித்துள்ளது. 2016இல் இதனைப் பெற்றுக் கொண்ட 50 மாணவர்களில் 31 மாணவர்கள் 4 வருடகால முகாமைத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் அதேவேளை 19 பேர் 5 வருடகால மருத்துவ பட்டப்படிப்பை படித்து வருகிறார்கள்.

கொமர்ஷல் வங்கியின் புலமைப்பரிசில்களை பெற்றுக் கொள்ளும் பட்டப்படிப்பு மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உதவியுடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேலும், தகுதியானவர்களை தெரிவு செய்வதில் மகாபொல அல்லது வேறெந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கும் தகுதியற்றவர்கள், க.பொ.த உயர்தர பரீட்சையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் எண்ணிக்கை, குடும்பத்தில் பாடசாலை செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை, பெற்றோரின் வருமானம், மாணவனின் வீட்டுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான தூரம் ஆகியன கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காரணிகளில் சிலவாகும்.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் தர்ம தீரசிங்க இந்த வருட புலமைப் பரிசில் வழங்கல் வைபவத்தில் உரையாற்றிய போது, அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றுக் கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட இந்நாட்டின் சனத் தொகையில் 6.6 சதவீதமானோரில் தாங்களும் இடம்பெற்றுள்ளமை தாங்கள் செய்த பாக்கியமே என்று இலங்கையின் பட்டதாரி மாணவர்கள் கருதவேண்டுமென தெரிவித்தார். கொமர்ஷல் வங்கி அதன் நிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் இந்த மாணவர்களின் உயர் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதென உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

கொமர்ஷல் வங்கியின் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் 2006ஆம் ஆண்டில் புலமைப்பரிசிலை பெற்றுக் கொண்ட முதலாவது தொகுதி மாணவரான சமீர ஜயவர்தன இந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியமை வைபவத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருந்தது. இப்பொழுது ஜயவர்தன நிதி அமைச்சின் செயலாளராகப் பணி புரிந்து வருகிறார்.

பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

துறை	கடந்த வாரம்	இந்த வாரம்
அனைத்துப் பங்கு விலைச்சுட்டி	6,539.09	6,494.86 ⇩
எஸ் & பி 20 சுட்டி	3,599.94	3,581.38 ⇩

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 2,292.060

உயர்வைந்தவை: பெஸ்ட் கப்பிரல்(31.50), டுனாமிஸ் கப்பிரல்(25.40), சிஜஎப்எல்(1.00), மேர்சன்ட் பாங்(14.80), பிறவுண்ஸ் பீச்(27.40).

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.): ஜே.கே.எச்(W)(2.90), கலமசு(1, 100.00), ஹெல்சே(47.30), பாம் காடின் ஹோட்.(32.20), அமானா தகபுல்(0.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

நாணயம்	கொ/வு விலை ரூபா.	வி/னை விலை ரூபா.
ஐக்கிய அமெரிக்க டொலர்	143.06	146.84
பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்)	189.85	196.44
யூரோ (ஐரோ.ஒன்றியம்)	160.31	166.52
சுவிஸ் பிராங்	146.26	152.26
கனேடிய டொலர்	110.04	114.51
அவுஸ்திரேலிய டொலர்	108.36	113.30
சிங்கப்பூர் டொலர்	105.40	109.39
ஜப்பான் யென்	1.39	1.44
இந்திய ரூபாய்	சுட்டி விலை 2.18	
ஐக்.அரபு இராச்சிய டிராம்	சுட்டி விலை 39.59	

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தீயசெயல்கள் மூலம் திரவியம் தேட முயலாதீர்கள்

இலங்கை தீவு பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்ட காலப்பகுதியின் 1818ஆம் ஆண்டளவிலேயே எமது நாட்டின் சிறைச் சாலைகள் நிறுவப்பட்டன. இந்த வகையில் அன்றைய ஆட்சியினரின் பட்டணமாக விளங்கிய கொழும்பு நகரத்தை மையப்படுத்தி முதலாவது சிறைச்சாலையாக வெலிக்கடை சிறைச்சாலை அமைக்கப்பட்டது. நாளடைவில் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஈடாக குற்றச்செயல்களும் குறைவின்றி அதிகரித்தன. அதன் விளைவாக நாட்டில் சிறைக் கூடங்களின் தேவையும் அதிகரித்தது. இதனால் அன்று ஆங்கிலேயரால் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுவந்த "குதிரைலாயங்கள்" தற்காலிக சிறைகூடங்களாக மாற்றப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த வகையில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அடுத்த படியாக கண்டி போகம்பரை சிறைச்சாலை (தற்போது தும்பரை) சிறைச்சாலை, மஹர சிறைச்சாலை போன்ற பிரதான சிறைச்சாலைகள் உருப்பெற்றிருந்தது .

இன்று நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி சுமார் 22 சிறைச்சாலைகளும் 19 லோக்கப்புகளும் இலங்கை சிறைச்சாலை திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற எமது நாட்டின் வருடம் தோறும் பலகோடி ரூபாய்களை செலவிட்டு சிறைச்சாலைகள் பராமரிக்கப்பட்டிருக்கின்றமை கவலை தரும் விடயமே என்றாலும் நாட்டில் நீதியும், நியாயமும் நிலை நிறுத்தப்பட்டு குடிமக்களின் இயல்பு வாழ்வு உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியமல்லமா? இதனூடாகவே இறைமை உள்ள இலங்கை தேசத்தை

இன்று தேசிய சிறைக்கைதிகள் தினமாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

எதிர்கால சந்ததிக்கு கையளிக்க முடியும். இது ஆட்சி பீடம் ஏறும் ஒவ்வொரு அரசினதும் தலையாய கடமை ஆகின்றது. இந் நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரஜையும் தாம் செய்யும் தவறுகளை தாமாக உணர்ந்து கொண்டு தாய்நாட்டை நற்றிசை நோக்கி நகர்த்த முன்வர வேண்டும். இச் சொற்றொடர் செயலுருப்பெறுமாயின் நாட்டில் உள்ள சில சிறைக்கூடங்கள் மூடப்பட்டு அதற்குப்பதிலாக பாடசாலைகள் திறக்கப்பட முகாந்திரமாக அமையும். சிறைகளில் அன்றாடம் நாம் சந்திக்கின்ற அநேகமான கைதிகளை பார்த்தோமானால் ஒவ்வொருவரும் தாம்செய்த தவறுக்கு ஒரு நியாயத்தை கற்பிக்க முயல்கின்றனர் . இவ் விடயத்தில் அத்த வறுகளை புரிய வைத்து அவர்களது தவறான நியாயத்தை,நியாயப்படுத்தலை நிர்மூலமாக்க வேண்டியது சிறைத்துறையினரின் கடமையாகும். பல கைதிகள் தொழிற்றுறை இன்மையால் அல்லது போதிய வருமானம் இன்மையில் பிழையான வழிகளில் பணம் மீட்ட முய ன்று சிறையேறி இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒருவன் தான் வறியவன் என்றெண்ணி தீயசெயல்களின் மூலம் திரவியம் தேட முயல்வதால் அவன் வாழ்க்கையில் நிரந்தரமான வறியவனாகவே மாற்றப்படுகின்றான் என்பதே உண்மை. இதனை இன்றைய இளைய சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். இளம் தலைமுறையில் ஒரு பகுதியினரைப் பார்த்தால் படிப்பில் கோட்டை விட்டுவிட்டு பணம் ஈட்டி சுகபோக வாழ்க்கை வாழ தலைப்படுகின்றனர். இதற்கென அதிகமானவர்கள் தேர்ந்தெடுக்கும் வழிமுறை போதைப் பொருள் வியாபாரமே ஆகும். ஒரு தனிநபரால் அல்லது ஒரு குடும்பம் சுகம் அனுபவிப்பதற்கு பதிலாக பல குடும்பங்கள் சீரழிந்து சின்னா பின்னமாகி போகின்றதையும் தனது தாய் தேசம் கொஞ்சம் கொஞ்சமாக போதைவஸ்துக்கு அடிமையாகி கொண்டிருப் பதையும் எத்தனை குற்ற வாளிகள் ஏற்றுக்கொள்கின் றார்கள் என்றால அது பூச்சியமாகவே காணப்படுகிறது.

இதை அவர்களுக்குள் தமது வாழ்வின் சத்தான காலப்பகுதிகளை சாகடித்து இருப்போரை பார்ப்போமானால் போதைவஸ்து,கொலை, கொள்ளை,பாலியல் வன்முறை,மோசடி போன்ற பல குற்றப் பின்னணி கொண்டவர்களாகவே வலம் வருகின்றார்கள். ஒரு மனிதன் உயர் நிலையில் இருந்தாலும் அவனிடத்தில் உயர் பண்பு இல்லையெனில் அவன் உயர்வானவன் என கருதமுடியாது. அதுபோல் தாழ்நிலையில் இருந்தாலும் இழி குணம் இல்லாதவன் தாழ்ந்தவன் என்று கொள்ள முடியாது. மனிதன் தன் உணர்ச்சிகளை தானே ஆளவேண்டும் . மாறான உணர்ச்சிகள் எம்மை ஆள இடமளிக்கக் கூடாது. இது தொடர்பான சமூக விழிப்புணர்வுகள், சமய நற்சிந்தனைகள், உளவள ஆலோசனைகள் ,தியான முறைமைகள், தலைமைத்துவ பயிற்சிகள் போன்றவற்றை சிறைக்கைதிகளுக்கு வழங்குவதன் மூலம் சிறையிலிருந்து விடுதலை பெறும் கைதிகளிடம் ஆரோக்கியமான விளை வுகளைஅறுவடை செய்ய முடியும். தற்கால இளைஞர், யுவதிகள் வழிதவறி செல்ல பிரதான காரணமாக அமைவது அவர்களது நட்பு வட்டாரமே என்றால் அது மிகையில்லை. ஒருவருடைய குணத்தையும் குடிச்சூழலையும் குற்றங் களையும் கூடுகின்ற சட்டங் களையும் குறைவின்றி ஆழ மாக அறிந்த பின் அவருடன் நட்பு பாராட்ட முடியாது. சிறந்த நட்பாக. இருக்க முடியும். இதனை கைக்கொள்ளாது கண்டவர்களோடும் கைபிணைப்போமாயின் காலத்தால் மீட்க முடியாத சாக்கடை வாழ்வாகி சீரழிய நேரிடும் என்பதை நினைவில் நிறுத்தி கொள்வோம்.

விவேகானந்தனூர் சதீஸ் கிளிநொச்சி

தமிழ் சினிமா வரலாறு

ஜெமினிகணேசன்,சாவித்திரி வெற்றி பவனி 248

பிரிவு

ஆனால் என்னை அடை வதிலும் ஆட்கொள்வதிலும் இருந்த அவரசம் என்னைப் பிரிவதிலும் புஷ்பவல்லிக்கு இருந்தது. நான்கு வருட நட்பை என்னைப் புரிந்து கொள்ளா மல் முறித்துக் கொள்ள அவள் முற்பட்டபோது, உயர எழுந்த அலை காலை மட்டும் நனைக்க வந்தவனை தலையோடு கால் நனைத்து அந்த சிலிர்ப்பில் இருந்து அவன் மீள்வதற்கும் அவனை விட்டுத்தள்ளி விலகிச்செல் லும் உணர்வு எனக்குள் ஏற் பட்டது. இவ்வாறு ஜெமினி கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஜெமினிகணேசனும், சாவித் திரியும் ஜோடியாக நடித்த படங்கள் வரிசையாக வெற்றி விழா கொண்டாடின.

1960இல் ஏவி.எம். தயா ரித்த களத்தூர் கண்ணம்மா வில் ஜெமினிகணேசனும் சாவித்திரியும் இணைந்து நடித்தனர். படம் பிரமாத மாக அமைந்தது.

இந்தப் படத்தில் தான் கமலஹாசன் குழந்தை நட் சத்திரமாக அறிமுகமானார்.

கல்கி எழுதிய பார்த்தீபன் கனவு சரித்திரக் கதையை பிரமாண்டமான படமாக ஜுபிலி பிலிம்ஸ் தயாரித் தது. இதற்கு விந்தன் வச னம் எழுதினார்.

இதில் ஜெமினி கணேசனுக்கு ஜோடி வைஜந்தி மாலா மற்றும் எஸ்.வி.ரங்கா ராவ், அசோகன், டி.எஸ். பாலையா, மாலதி, குமாரி கமலா ஆகியோர் நடித்தனர். படம் சுமாராகவே ஓடியது.

கருணாநிதி வசனத்தில் ஜெமினி

இதே ஆண்டில் வெளி வந்த எல்லோரும் இந்நாட்டு மன்னர் படத்தில் ஜெமினி கணேசனுக்கு ஜோடி சரோஜா தேவி.

கதை-வசனத்தை மு.கரு ணாநிதி எழுதியிருந்தார். கருணாநிதி வசனத்தில் ஜெமினி கணேசன் நடித்த ஒரே படம் இதுதான். இந்தப் படத்தின் டைரக்டர் பி.பிரகாஷ்ராவ்.

பாசமலர்

1961ஆம் ஆண்டில் ஜெமினி கணேசனின் சிறந்த படங்கள் வரிசையாக வந்தன.

சிவாஜி,ஜெமினி, சாவித்திரி இணைந்து நடித்த மகத்தான படமான பாசமலர் இந்த ஆண்டில் தான் வெளிவந்தது. ராஜாமணி பிக்சர்ஸ் பனரில் எம்.ஆர்.சந்தானமும் கே.மோக னும் தயாரித்த படம் இது. அண்ணன்-தங்கை பாசத்தை



மையமாகக் கொண்ட கதை. அண்ணனும் தங்கையுமாக சிவாஜியும் சாவித்திரியும் வாழ்ந்து காட்டினார்.

முதலில் நண்பர்களாக இருக்கும் சிவாஜியும் ஜெமி னியும் பிறகு விரோதிகளாக மாறுவார்கள். சிவாஜிக்கு ஈடு கொடுத்து அருமையாக நடித்தார் ஜெமினி.

கே.பி.கொட்டாரக்கரா எழுதிய கதை இது. வசனம் எழுதியவர் ஆரூர்தாஸ். தேவர் படங்களுக்கு வசனம் எழுதிக் கொண்டிருந்த இவரை சிவா ஜிக்கு அறிமுகம் செய்து வைத் தவர் ஜெமினி கணேசன். பாச மலர் வெற்றியைத் தொடர் ந்து சிவாஜியின் படங்களு க்கும் வரிசையாக வசனம் எழுதினார் ஆரூர்தாஸ்.

பாசமலர் படத்தை டைர க்ட் செய்தவர் பீம்சிங். அவ ருடைய பா வரிசைப் படங் களில் மிகப்பெரிய வெற் றிப் படம் இது.

இந்தப் படத்துக்கு இசை அமைத்தவர்கள் விசுவ நாதன்- ராமமூர்த்தி.

இப்படம் தெலுங்கில் டப் செய்யப்பட்டது. பிறகு இந்தி, சிங்களம் ஆகிய மொழிக ளில் தயாரிக்கப்பட்டது.

தேன்நிலவு

வீனஸ் பிக்கர்ஸ் நிறு வனத்தில் இருந்து விலகி டைரக்டர் ஸ்ரீதர் சொந் தமாகத் தொடங்கிய சித்ரா லயா பனரில் தயாரித்த படம் தேன்நிலவு. ஜெமினிகணே சனும் வைஜந்திமாலாவும் ஜோடியாக நடித்த இப்படம் சிறந்த பொழுது போக்குப் படமாக அமைந்தது. ஏ.எம். ராஜா இசை அமைப்பில் பாட்டுப்பாடவா, ஓஹோ எந்தன் பேபி முதலான பாடல்கள் ஹிட்டாக அமைந்தன. (தொடரும்)

ஊர் இரண்டு பட்டால்
கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் நெஞ்சுக்கு நீதியுடன் நடவுங்கள்

உடுவில் மகளிர் கல்லூரி எம் மண்ணில் இருக்கக்கூடிய ஒரு பழமை வாய்ந்த கல்லூரி. யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் அந்தக் கல்லூரியின் வகிபாகம் சாதாரணமானதல்ல.

இருந்தும் இன்றைய சூழ்நிலையில் அந்தக் கல்லூரி சின்னாபின்னப்பட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், தென்னிந்திய திருச்சபையின் தலைமை நிர்வாகம், கல்லூரியின் பணிப்பாளர் சபை என கன்னை பிரிந்து நிற்பது கண்டு மனம் வெந்து போகிறது.

வடபுலத்தின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ள இன்றைய யதார்த்த நிலையில், பிரபல்யமான கல்லூரிகள் உள்ளிட்ட எந்தப் பாடசாலைகளையும் குழப்புவதில் யார் ஈடுபட்டாலும் அது வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும்.

அதேவேளை இதுதான் சந்தர்ப்பம் எனக் கருதி ஒவ்வொருவரும் தத்தம்பாட்டிற்கு பக்கம் சார்ந்து தகவல்களை-அறிக்கைகளை வெளியிடுவது மிகப்பெரும் பாவச்செயல். இந்தச் செயலை நிச்சயம் இறைவன் ஒரு போதும் மன்னிக்க மாட்டான்.

உடுவில் மகளிர் கல்லூரி தென்னிந்திய திருச்சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்டது. எனவே இறைபோதனை செய்கின்ற ஓர் அமைப்பு இந்த அளவு தூரம் உடுவில் மகளிர் கல்லூரியை பிசக்கி இருக்கக்கூடாது என்பது நம் தாழ்மையான கருத்து.

இங்கு மாணவிகள் தாக்கப்படவில்லை எனவும் அது ஒரு சிலரால் புனையப்பட்டது எனவும் பாடசாலை மீது நலன் கொண்டவர்கள் எனத் தம்மை குறிப்போர் ஊடகங்கள் மூலம் அறிக்கை விட்டுள்ளனர்.

அந்த அறிக்கை உண்மையா? அல்லது பொய்யா? என்பது குறித்தும், தம்மை ஆசிரியர்கள் சிலர் கடுமையாகத் தாக்கினர் என்றும் கல்லூரிக்குள் நுழைந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தங்களை ஓடி ஓடிப் படம் பிடித்தார் என்றும் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் மகஜர் தயாரித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் சம்பவம் அடங்கிய ஆதாரங்களையும் கையளித்துள்ளதாக கூறப்படுகிறது.

அப்படியானால் மாணவிகள் கூறுவது உண்மையா? அல்லது பொய்யா? என்பது தொடர்பிலும் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். நீதி விசாரணை ஒன்றுதான் உண்மையைக் கண்டறிவதற்கு உதவும்.

ஆக, உடுவில் மகளிர் கல்லூரி மீது யாருக்கேனும் அக்கறையும் கருசனையும் இருக்குமாயின் அவர்கள் சொல்ல வேண்டியது நீதி விசாரணை நடத்துங்கள். யாருடைய அறிக்கைக்கும் எடுபடாதீர்கள் என்பதாகவே இருக்கும்.

இதுவே நெஞ்சுக்கு நீதியானது. இதைவிடுத்து அவர்கள் தாக்கவில்லை; இவர்கள் பொய் சொல்லுகிறார்கள்.

அல்லது இவர்கள் உண்மை சொல்லுகிறார்கள்; அவர்கள்தான் பொய் சொல்லுகிறார்கள் என்ற வாதம் அபத்தமானது; அநியாயமானது.

பரமபிதாவை வழிபடுகின்ற ஒரு திருச் சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு கல்லூரியில் இருக்கக் கூடிய ஒருவரேனும்,

ஐயா! பக்கச்சார்பற்ற நீதி விசாரணையை நடத்துங்கள். நீதி விசாரணை என்ன முடிவைத் தருகிறதோ அதை ஏற்றுக்கொள்ளுங்கள். தவறு விட்டவர்கள் பகிரங்க மன்னிப்புக் கேட்கட்டும் என்பதுதான் நெஞ்சுக்கு நீதியானது.

ஓ! யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய புத்திஜீவிகளே! உடுவில் மகளிர் கல்லூரியில் நடந்தவையும் அவை கையாளப்படும் விதங்களும் இறைவன் எங்களுக்கு ஒருபோதும் பாவமன்னிப்பு தரமாட்டான் என்பதையே நிரூபிக்கின்றதல்லவா?

மீனவர் ஒருவர் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை தலைமையக பொலிஸ்பிரிவுக்குட்பட்ட இலிங்க நகர் பகுதியிலுள்ள வடிகானிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை, மனவர் ஒருவரது சடலத்தை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை - இலிங்க நகர் யூதா கோயில் வீதியைச் சேர்ந்த எம்.ஜேசுராஜா (வயது 55) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை, கடலுக்குச் செல்வதாக தெரிவித்துச் சென்ற குறித்த மீனவர், மறுநாள் அதிகாலை ஆகியும் வீட்டுக்குத் திரும்பாமை காரணமாக, அவரை தேடியபோதே அவரது சடலம் வடிகானிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

திருடப்பட்ட நகைகள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, புதிய காத்தான் குடி பரீட் நகர் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் திருடப்பட்ட தங்க நகைகளை அவ்வீட்டு நுழை வாயிலுக்கு அருகில் காணப்பட்ட குப்பைக்குள்ளிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மீடடுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வீட்டுச் சிறுவன் குப்பையுடன் நகைகள் காணப்பட்டதை அவதானித்து, அது தொடர்பில் பெற்றோருக்குத் தெரியப்படுத்தியுள்ளான்.

இதனை அடுத்து, பெற்றோர் சென்று அந்த நகைகளை எடுத்துப் பார்த்தபோது, அவர்களின் வீட்டில் திருடப்பட்ட நகைகளெனத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் காத்தான குடி பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில், அங்கு சென்ற பொலிஸார் விசாரணையின் நிமித்தம் அந்நகைகளை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட நகைகளில் 3 காப்புகள், தங்கச் சங்கிலி உட்பட சுமார் 20 பவுண் நகைகள் காணப்படுவதாகவும் பொலிஸார் கூறினர்.

நகைகளைத் திருடிய வரே அவற்றை வீசி விட்டுச் சென்றிருக் கலாமெனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி குறித்த வீட்டு உரிமை யாளரும் அவரது பிள்ளைகளும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில், வீட்டு உரிமையாளரின் மனைவி வீட்டின் பின்புறம் சென்ற போது, வீட்டினுள் மறைந்திருந்த திருடன் மனைவியை பொல்லால் தாக்கிவிட்டு திருடப்பட்ட இரண்டரை இலட்சம் ரூபாய் பணம்மற்றும் 20 பவுண்நகையுடன் தப்பியோடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

தியாகத்திருநாளின் மகிமையை ஒற்றுமையுடன் உணர்ந்திடுவோம்

கிழக்கு முதலமைச்சர் நஸீர் பெருநாள் வாழ்த்து

(திருகோணமலை)

உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்க இன்றைய தியாகத் திருநாளில் நாம் அனைவரும் பிரார்த்திக்க வேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் விடுத்துள்ள ஹஜ் ஜப் பெருநாள் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்து செய்தியில் மேலும் குறிப் பிடுகையில், புனித மக்கமா நகரில் தியாகத்தை நினைவூட்டும்வகையில் ஒன்று கூடியுள்ள அனைத்துலக மக்களும் எந்த விதமான பேதமுமின்றி இறையோனின் கட்டளைக்கு அடிபணிந்து பிரார்த்தனைகளிலும், தொழுகைகளிலும், நல்லமல்களிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆண்டான், அடிமை என்ற பேதமின்றியும், கறுப்பன் வெள்ளையன் என்ற நிற வேறுபாடின்றியும், நாடு குல பேதங்களை மறந்து இஸ்லாமியர்களாகிய அனைவரும் புனித மக்கமா நகரில் ஹஜ்ஜுக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இன் றைய தியாகத் திருநாள் சமூ கங்களுக்கிடையே பல்வேறு படிப் பினைகளை உருவாக்கி உள்ளது.

இறையோனின் கட்டளைக்கு அடி பணிந்து நபி இப்றாகிம் (அலை) அவர்கள் அன்பு மைந்தன் இஸ்மாயிலை அறுத்துக் குர்பான் கொடுப பதற்கு தயாரான வரலாறும், அதன பின்னரான பல்வேறு சம்பவங்களும் இந்த புனித ஹஜ்ஜுக் கடமையில் உணர்த்தப்படுகின்றது. இஸ்லாமியர்களாகிய நாம் ஒற்றுமையுடன் செயற்படுவதற்கும் ஏனைய சமூகங்களுடன் பரஸ்பர நல்லுறவுடன் வாழ்வதற்கும் திட சங்கற்பம் பூணவேண்டும்.

வடக்கு, கிழக்கில் யுத்தக் கோரப்பிடிக்குள் சிக்கியிருந்த நாம் இன்று அதிலிருந்து விடுபட்டு சாந்தி சமாதானத்துடன் வாழ்வதற் கான சூழல் இன்று உருவாக்கப் பட்டுள்ளது.

எனவே இந்த அருமையான சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு நாம் எந்த விதமான பேதமுமின்றி வாழப்பழகிக் கொள்வதன் மூலமேசமூகங்களுக்கிடையே தொடர்ந்து நல்லுறவு நீடிக்கும்என அவர்தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். (செ-9)

கஞ்சாவுடன் மூவர் கைது

(ஏறாவூர்)

கஞ்சா மற்றும் கஞ்சா சுருட்டை விற்பனைக்காக வைத்துக் கொண்டு வீதியில் நடமாடியதாகக் கூறப்படும் 3 பேரை மட்டக்களப்பு, ஏறாவூர் நகரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்களில் காளிகோவில் வீதியைச் சேர்ந்த 22 வயதுடையவரிடமிருந்து 2400 மில்லிகிராம் கஞ்சாவையும் ஏறாவூர் ஜயன்கேணியைச் சேர்ந்த 26 வயதுடையவரிடமிருந்து 3190 மில்லிகிராம் கஞ்சாவையும் மிச் நகர் கிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடையவரிடமிருந்து கஞ்சா சுருட்டொன்றையும்கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்களை இன்று திங்கட்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுதத வுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (செ)

அதிவேக நெடுஞ்சாலை திருமலைவரை நீடிப்பு

(கொழும்பு)

கேந்திர முக்கியத்துவம் மிக்க துறைமுக நகரான திருகோண மலையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், வடக்கு அதிவேக நெடுஞ் சாலை திருகோணமலை வரை நீடிக்கப்படவுள்ளதாக, நெடுஞ் சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தம்புள்ள, ஹபரணை வழியாக இந்த நெடுஞ்சாலை நீடிக்கப்படவுள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ் சாலையில் இருந்து, கிளையாக, இந்த வடக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப் படவுள்ளது.

வடக்கு அதிவேக நெடுஞ் சாலை ஹபரணை வரையில் சீன நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்படுமென தெரிவித்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல,

அதனைதிருகோணமலை வரை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (செ)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமைகாலை8.30 மணியிலிருந்து 6 மணி வரை **யாழ். பிரதேசத்தில** அச்செழு பிரதேசம், பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், கறுகாய் பிரதேசம், வாழைத தோட்டம்ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** தோணிகல் சிவன் கோவில் பிரதேசம், குட்செட் வீதி, குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோவில்வரை, மடு கந்தவிலிருந்து குடாகச்சக் கொடியவரை, T.M.M அரைக்கும ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** முதலைக்குத்தி பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

உன்னையே நீ அறிவாய்

இரும்பு ஒரு கரண்டியாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இரும்பு என்றாலும் கரண்டி என்றாலும் அது ஒரு பொருளையே குறிக்கும். அது போல் தெய்வம் என்ற அருட்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்கும் எல்லாமாக இருக்கிறது. நீயுமாக மனித வடிவமாக இருப்பதும் அதுவே. இந்தக் கருத்தில் மனத்தைப் பதித்துக் கொண்டு உண் மையை உணர்ந்து கொள். நீயென்றாலும் தெய்வ மென்றாலும் ஒரு பொருளையே குறிக்கும்.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடுகிறது. அவ்விரும்புக்கு கரண்டி என்று கொடுத்த பெயர் மறைந்து விடுகிறது. என்ன மிச்சம்? இரும்பு தான். இரும்பைப் பல வடிவங்களாக்கி, பெயர்களை அக்கருவிக்குக் கொடுக்கிறோம். வடிவத்தையும் பெயரையும் கழித்துவிட்டால் மிஞ்சுவது இரும்புதானே!

அதேபோன்று, நீ உன்னையறிந்து கொள்ள முயற்சி செய்! மனிதனென்ற வடிவத்தையும், உன் செயல் பதிவுகளாக உள்ள வினைப்பதிவுகளையும் கழித்துப் பார்! உன்னில் மிஞ்சுவது எல்லாம் வல்ல அருட்பேராற்றலாக விளங்கும் பரம்பொருளே.

அடுத்த சுற்றுக்கு முன்னேறியது Jolly Boys விளையாட்டுக்கழகம்

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் Northern Challenger 2016 உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் Jolly Boys விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் வி.கழகம் மோதியது. 1:1 என்ற ரீதியில் போட்டி சமநிலையில் முடிவுடைய சமநிலைத் தவிர்ப்பில் பலாலி விண்மீன் வி.கழகத்தை வெற்றி கொண்டு Jolly Boys வி.கழகம் அடுத்த சுற்றுக்கு தெரிவானது. (க)

கஜேந்திரன் சிறப்பாட்டம் இளம்பிறை வி.க.வெற்றி

வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பந்து பரிமாற்றங்கள் 8 வீரர்கள் கொண்ட மென்பந்து போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இளம்பிறை விளையாட்டுக்கழகம் *2 ஆவது போட்டியில் வல்வை நெடியகாடு அணியுடன் மோதி வெற்றி பெற்றுள்ளது.

ஆட்ட நாயகனாக -15 ஓட்டங்களையும் 2 இலக்குகளையும் கைப்பற்றிய கஜேந்திரன் தெரிவானார். (க)

வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து போட்டி இளம்பிறை வெற்றி

வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பந்து பரிமாற்றங்கள் 8 வீரர்கள் கொண்ட மென்பந்து போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இளம்பிறை விளையாட்டுக்கழகம் *1 வது போட்டியில் கலைமதி அணியுடன் மோதி வெற்றி பெற்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக 19 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்த சிவகுமார் தெரிவானார். (க)

கரப்பந்தாட்ட முடிவுகள்

ஜனாதிபதி தங்கக்கோப்பை வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்ட போட்டியில் 22 வயது பிரிவில் இளவாலை மத்தி புத்தூர் வளர்மதியை 3:0 எனவும் திறந்த போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞன் ஆவரங்கால் மத்தியை 3:0 எனவும் வெற்றி பெற்றது. (க)

மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொம்பாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஆறுபேர் ஐந்து பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்து சுற்று போட்டிகள் இன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதனால் இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்களை 077 493 8766, 077 941 8830 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு மேற்படி மென்பந்து சுற்றுப்போட்டியை நடத்தும் விளையாட்டுக்கழகம் கோரியுள்ளது. (க)

இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது சாவல்கட்டு மகாத்மா வி.கழகம்

அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி போட்டியில் சாவல் கட்டு மகாத்மா வி.க. எதிர்த்து ஊரெழு றோயல் வி.க. மோதியது. இதில் சாவல் கட்டு மகாத்மா வி.க. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது. (க)

கணேசபுரம் கண்ணகி வி.கழகம் அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது

அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டியில் கணேசபுரம் கண்ணகி விளையாட்டுக்கழகம் களுமுந்தன் வெளி விநாயகர் விளையாட்டுக்கழகத்திற்கு எதிராக மோதியது. போட்டியில் 1.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது கணேசபுரம் கண்ணகி விளையாட்டுக்கழகம். (க)

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி இறுதிப் போட்டியில் ஜோகோவிச்-வாவ்ரிங்கா

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச், வாவ்ரிங்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த அரை இறுதியில் நம்பர் வன் வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் பிரான்சின் கேல் மான்பில்சுடன் மோதினார்.

இதில் தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்ட ஜோகோவிச் ஆட்டத்தின் இடையே சிகிச்சை எடுத்துக் கொண்டு தொடர்ந்து விளையாடினார்.

2 மணி 32 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6-3, 6-2, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் மான்பில்ஸ்சை தோற்கடித்து அமெரிக்க ஓபனில் 7 ஆவது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

ஜோகோவிச்சுக்கு எதிராக மான்பில்ஸ் இதுவரை ஆடிய 13 ஆட்டங்களிலும் தோல்வியையே தழுவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு அரைஇறுதியில் 3 ஆம் நிலை வீரர் சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா, ஜப்பானின் நிஷிகோரியை எதிர்கொண்டார். விறுவிறுப்பான இந்த மோதலில் வாவ்ரிங்கா 4-6, 7-5, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் நிஷிகோரியை வெளியேற்றினார். (க)



குற்றச் செயல்களுக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது அவர் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ்.பொலிஸ் நிலையத்தை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் திறந்து வைத்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தின் நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பிரதே சத்தில் குற்ற வியல் வழக்குகளை விசாரணை செய்யும் நீதிபதிகள் இந்த விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த அழைப்பையேற்று சென்ற யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தலைமையிலான இந்த நீதிபதிகள் குழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பிரத்தியேக சந்திப்பொன்று இடம்பெற்றது.

சுமார் பதினைந்து நிமிடங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போதே யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி யாழ்.குடாநாட்டில் போதைப்பொருள் கடத்தல் வர்த்தகம் உள்ளிட்ட குற்றச் செயல்கள் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என உறுதியளித்தார்.

தென்னிந்தியாவில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு போதைப்பொருள் கடத்தப்படுகின்றது. கடத்தல் மட்டுமல்லாமல், போதைப்பொருள் வர்த்தகமும் இங்கு இடம்பெற்று வருகின்றது. இந்த வர்த்தகம் தற்போது, மாதகல் மற்றும் பருத்தித்துறை கடற்கரைப் பிரதேசங்களை நோக்கி நகர்த்தப்பட்டிருக்கின்றது, கடலோரப் பிரதேசங்களில் அண்மைக் கால மாக பெருந்தொகையான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. பல சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

இங்கு நடைபெறும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகத்தில், முக்கியமாக 10 வீதமான கஞ்சா மட்டுமே, யாழ்.குடாநாட்டுக்குள் விடப்படுகின்றது. மிகுதி 90 வீதமான கஞ்சா யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்குக் கடத்தப்படுகின்றது.

எனவே, இந்த போதைப்பொருள் கடத்தலையும் வர்த்தகத்தையும் தடுத்து நிறுத்த வேண்டுமானால், நெடுந்தீவில் இருந்து மன்னார் வளைகுடா வரையில் கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் படகுகளை கடலில் வைத்து கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வடபிராந்திய கடற்படைத் தளபதிக்கு இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என நீதிபதி இளஞ்செழியன் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து, அந்த மண்டபத்தில் சமுகமளித்திருந்த வடபிராந்திய கடற்படைத் தளபதிரியர் அட்மிரல் பியால் டி சில்வா, சட்டம் ஒழுங்கு மற்றும் தென்பகுதி அபிவிருத்திக்கான அமைச்சர் சாகல ரட்நாயக்க, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழ்.குடாநாட்டுக்கான பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன ஆகியோரைத் தன்னிடத்தில் அழைத்து, நீதிபதி இளஞ்செழியனை கோரிக்கையை அவர்கள் முன்னிலையில் மீண்டும் தெரிவிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, நெடுந்தீவில் இருந்து மன்னார் வளைகுடா வரையில் கடற்படையினருடைய ரோந்து நடவடிக்கையை அதிகரப்பது தொடர்பிலும், யாழ்.குடாநாட்டில் இடம பெற்று வருகின்ற போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள் வர்த்தகத்தையும் ஏனைய குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி,நீதிபதிகள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் அமைச்சருடன் கலந்தாலோசனை நடத்தினர்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கூட்டுப் பாலியல் கொலை, அதனையடுத்து யாழ். நீதிமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகிய சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக தான் நியமிக்கப்பட்டதாக நிதிபதி இளஞ்செழியன் தெரிவித்து, யாழ்.குடா நாட்டின் குற்றச் செயல்கள் தொடர்பில் நீதிமன்றங்களின் செயற்பாடு குறித்து ஜனாதி பதிக்கும் ஏனையோருக்கும் தெளிவுபடுத்தினார்.

யாழ்.குடாநாட்டில் போதைப்பொருள் வழக்குகளையும் மற்றும் குற்றச் சம்பவங்கள் தொடர்பிலான பிணை மனு தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கின்ற யாழ்.மேல் நீதிமன்றம், பிணை வழங்குவதில் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பொலிஸாரின் புலனாய்வு விசாரணைகளையும், சமூக நலன்களையும் கவனத்திற் கொண்டு, கருதியும் போதைப்பொருள் வழக்குகளில் பிணை வழங்குவதில்லை.

அத்துடன், யாழ்.குடா நாட்டில் தலை விரித்தாடிய போதைப்பொருள் கடத்தல், வாள் வெட்டு, மாணவர் குழு மோதல், வீதிச் சண்டித்தனம், பெண்கள் மீதான தாக்குதல்கள், கோஷ்டி மோதல்கள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

அதேவேளை, மானிப் பாய் பிரதேசத்தில் சங்கு வேலி பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தின் சந்தேக நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அவர்களைத் தாமதமின்றி கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனா திபதியின் முன்னிலையில் அவர் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் கேட்டுக்கொண்டார்.

போதைப் பொருள் கடத்தல் விடயத்தில் கடற்படையினர் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். அத்துடன், விசேட அதிரடிப்படை, பொலிஸ் படை என்பவற்றுடன் இணைந்து கடற்படை யினர் கடலோரப் பிரதேசங்களில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அண்மைக்காலமாக பெருந்தொகையான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டிருக்கின்றது. அவற்றைக் கடத்தி வந்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா, ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக நெடுந்தீவில் இருந்து மன்னார் வளைகுடா வரையிலான கடற்பிரதேசத்தில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி நடத்திய இந்தக் கலந்தாலோ சனையின்போது வட பிராந்திய கடற்படைத் தளபதி உறுதியளித்தார்.

யாழ்.குடாநாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொலிஸார் பொறுப்புடன் செயற் பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

சங்குவேலி கொலைச் சம்பவம் தொடர்பிலான சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்கள். தலைமறைவாகியுள்ள அவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி முன்னிலையில் பதிலளித்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உறுதியளித்தார்.

யாழ்.குடாநாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமைகள் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான நிலைமைகள், குறிப்பாக போதைப் பொருள் கடத்தல் மற்றும் வியாபாரம் தொடர்பிலான நிலைமைகள் என்பவற்றைக் கேட்டறிந்த ஜனாதிபதி போதைப் பொருள் பாவனை ஒழிப்பிலும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத் துவதிலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அதி காரிகளுக்கு இந்தச் சந்திப்பின் போது, விசேட பணிப்புரைகளை விடுத்தார்.

இந்தச் சந்திப்பின் இறுதியில், யாழ்ப்பாண நீதிபதிகளை ஜனாதிபதி சந்தித்தமைக்கும், நீதிபதிகளுக்கு ஜனாதி பதி வழங்கிய கௌரவத்துக்கும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் உடன் பணிப்புரைகள் பிறப்பித்தமைக்கும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தலைமையிலான நீதிபதிகள் தமது மகிழ்ச்சியையும், கௌரவத்தையும் நன்றியையும் தெரிவித்தனர். (இ-4)

வரலாற்றுத்...

யுத்தமாகும். சமாதான புரிந்துணர்வு மிக்க நல்லாட்சி அரசின் காலத்தினை சாதகமாக்கிக் கொண்டு தமிழர், தமிழ் தலைவர்கள் தம் வாய்களைத்திறந்தால் சமாதானம் நல்லாட்சி குலைந்து விடும் என்னும் மாயையைக் காட்டி தமிழர்களை பேசாமடந்தையாகளாக வைத்துக்கொண்டு மிக கச்சிதமாக சமய கலாசார அழிப்பு யுத்தத்தினை நடத்தி வருகின்றார்கள். இதனை ஒருபொழுதும் நாம் ஏற்க முடியாது.

எனவே எமது சைவத்தமிழர் சார்பிலான மறுப்புக்கருத்துக்களை இச்சந்தர்ப்பத்தில் நாம் வெளிப்படுத்துதல் அவசியமாகும். இல்லாவிட்டால் நாமும் வரலாற்று துரோகம் இழைத்தவர்களாகி விடுவோம். தமிழ்மக்கள் பேரவையினர் ஏற்பாட்டில் அனைத்து தமிழ் கட்சிகளும் தலைவர்களும் தமக்குள் இருக்கின்ற கருத்து முரண்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு ஓர் அணியாக அணிவகுத்து நிற்கும்போது அவர்களுக்கு நாம் வலுச்சேர்ப்பது எமது தார்மீக கடமையாகும். எனவே துறவிகள், குருமார்கள், ஆலய பரிபாலகர்கள், அறங்காவலர்கள், அடியார்கள், இந்து அமைப்பினர்கள், இந்து இளைஞர் மன்றத்தினர்கள், அனைவரும் ஒன்று சேர்ந்து பேரணியின் முதன்மையாளர்களாக முன்னின்று பேரணிக்கு வலுச்சேர்க்க பெருந்திரளாக அணிதிரளுமாறு வீணாகான குருபீடம் சைவத்தமிழ் மக்களை அழைக்கின்றது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

உதவி பொலிஸ்...

ந்த நிலையில் குறித்த திரையரங்கில் நுழைவு சீட்டு விற்கும் ஊழியர்கள் பின் கதவினால் நுழைவு சீட்டின் விலையை விட நூறு ரூபாய் அதிகமாக்கி நுழைவு சீட்டை விற்பனை செய்துள்ளனர். இதனை வரிசையில் நின்ற இளைஞர்கள் அவதானித்து அது தொடரபில் ஊழியர்களுடன் வாக்குவாதப்பட்டனர்.

அதன் பின்னர், ஊழியர்கள் பின் கதவால் நுழைவு சீட்டு விற்பதனை நிறுத்தியிருந்தனர். அதன் பின்னர் ஊழியர்களுடன் வாக்குவாதப்பட்ட இளைஞர்கள் வரிசையில் நின்று நுழைவு சீட்டை பெற்றுக் கொண்டு திரையரங்கினுள் செல்வதற்கு சென்ற போது குறித்த இளைஞர்களை ஊழியர்கள் திரையரங்கினுள் விடாது தடுத்து நிறுத்தியுள்ளனர். இதன்போது ஊழியர்கள் தடுத்ததையும் பொருட்படுத்தாது, இளைஞர் குழு திரையங்கினுள் சென்று உட்கார்ந்துள்ளது.

அந்நேரம் அங்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தை சேர்ந்த தமிழ் உதவி பொலிஸ் பரிசோதகர் ஒருவர் சிவில் உடையில் தனது பின் பக்கமாக கைத்துப்பாக்கியை செருகியபடி, திரையரங்கினுள் நுழைந்து ஊழியர்களுடன் வாக்குவாதப்பட்ட இளைஞர்களை திரையரங்குக்கு வெளியில் அழைத்துள்ளார். அங்கு வைத்து இளைஞர்களுக்கு துப்பாக்கி காட்டி உங்களை கைது செய்ய போறேன் என மிரட்டி உள்ளார்.

இருந்த போதிலும் இளைஞர்கள், தமது நியாயத்தை எடுத்துக்கூறி இதற்கு மேலும் நீங்கள் கைது செய்வது என்றால் கைது செய்யுங்கள் என கூறினர். அதனை தொடர்ந்து குறித்த உதவி பொலிஸ் பரிசோதகர் , இது உங்கள் தியேட்டர் இல்லை, இங்குள்ளவர்கள் தாம் விரும்பியபடி விரும்பியவர்களுக்கு ரிக்கெட் விற்பார்கள். அதனை கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. உங்களை இவர்கள் வாருங்கள் என அழைத்து படம் காட்டவில்லை.

விரும்பினால் வந்து பாருங்கள். இல்லை எனில் வேறு தியேட்டருக்கு சென்று படம் பாருங்கள் என மிரட்டியுள்ளார். அத்துடன் இப்ப உள்ளே போய் படத்தை சத்தம் போடாமல் பார்த்துட்டு போகணும். இல்லை எனில், உங்களை நான் கைது செய்வேன் என துப்பாக்கியை காட்டி மிரட்டி விட்டு இளைஞர்களை படம் பார்க்க அனுமதித்திருந்தார்.

இந்நிலையில் மேற்படி சம்பவத்தால் திரையரங்கப் பகுதி சிறிது பதற்றம் ஏற்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (செ-4)

கல்முனையில் பூமியதிர்ச்சி

(அம்பாறை)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பகுதியில் நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதில் வீடுகளுக்கும் கட்டடங்களுக்கும் சிறு சேதங்கள் ஏற்பட்டதுடன் நிலங்களிலும் சிறு சிறு வெடிப்புக்களையும் காணக்

கூடியதாகவுள்ளது.

இதனால் அங்கு சிறிது நேரம் பதற்றமும், பரபரப்பும் நிலவியது. சிறிது நேரத்தில் பொலஸாரும் அப்பகுதிக்கு வந்து மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தியிருந்தனர்.

இதேவேளை, பெரு நாட்டின் வடக்குப் பகுதியில் நேற்று முன் தினம் 6.1 ரிக்டர் அளவில் பயங்கர பூமியதிர்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

தாயும் மகளும் படுகொலை; மட்டு. ஏறாவூரில் சம்பவம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் நகர் முகாந்திரம் வீதி, முதலாவது ஒழுங்கையில் வசித்து வந்த தாயும் மகளும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நூர்முஹம்மது சித்தி ஜனீரா (வயது 55) மற்றும் அவரது மகளான ஜனீரா பானு மாஹிர் (வயது 34) ஆகியோரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டின் கூரையை கழற்றி வீட்டுக்குள் நுழைந்துள்ள இனந்தெரியாத நபர்களே இக் கொலையை செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

முறையான...

ரும் சர்வதேச சட்டங்களை மீறும் மிகவும் கொடூரமான யுத்தக் குற்றங்களும் மனிதகுலத்திற்கு எதிரான கொடூரங்களும் இடம் பெற்ற போதிலும் அவை தொடர்பான முறையான விசாரணைகள் இன்னமும் மேற் கொள்ளப்படாதுள்ளதுடன் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படாத நிலையும் தொடர்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கூறல் நல்லிணக்கம் மற்றும் போர் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறை களை தாமதமின்றி உருவாக்கி அவற்றின் ஊடாக பேரவைக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் இன்னமும் பல விடயங்களை பூர்த்திசெய்ய வேண்டியுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான மக்களின் கருத்துக்களை அறிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் அந்த அமர்வுகளில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதுள்ளதாக கவலை வெளியிட்டுள்ள மன்னிப்புச் சபை அரசாங்கம் நடத்திய கருத்தறியும் அமர்வுகளில் கலந்துகொண்ட பாதிக்கப்பட்ட மக்களில் பலர் அரச படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

தூய சுதந்திர...

கலந்துகொண்டு உரை யாற் றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சியின் 70 ஆவது மாநாடு எமது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர், எமது கட்சியின் ஸ்தாபகரின் மகள் உட்பட எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலரின் பங்களிப்புடன் நடைபெற்றது.

அதேபோன்றே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாடும் ஐக்கிய தேசியக் கட்சியினருடன் இணைந்தே நடத்தப்பட்டது.

இது பற்றி எனக்கு யாரோ எழுதி அனுப்பியுள்ளார்கள். இந்த இரு கட்சிகளையும் கலைத்து விட்டு ஒரு கட்சி அமைத்தால் சிறந்தது எனவும் அத்தோடு அந்தக்கட்சியின் பெயர் இவ்வாறு அமையவுள்ளது எனவும் கடிதம் எழுதியவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு புதியகட்சி அமைக்கப்பட்டால் மிகச் சரியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எம்முடன் இருப்பதை அனைவரும கண்டுகொள்ளலாம்.

ஏனெனில் உண்மையான தூய சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எம்முடனேயே இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் விலை போகாதவர்களாக தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள் என மகிந்த குறிப்பிட்டார். (மற்று மொரு செய்தி உள்ளே) (செ)

அபிவிருத்தி திட்...

செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவ்வாறு வழங்கப்படா விடின் அவர்கள் பணிகளை முன்னெடுக்க மாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

தீர்மானம் எடுக்கும் திறன் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும். ஆனால் சில தீர்மானங்களை எடுக்கும் அதிகாரிகள் பிரச்சினைகளை எதிர்நோக்கும போது நாம் ஏன் தீர்மானம் எடுக்க வேண்டும் என தற்போதுள்ள அதிகாரிகள் நினைப்பதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இதன்காரணமாகவே தற்போது பணிகள் முடக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார். (செ-11)

கைதிகளின் உற...

மாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அவர்களின் உறவினர்களால் மேற்படி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் துண்டுப்பிரசுரமும் வழங்கப்படவுள்ளது

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு கைதிகளின் விடுதலைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற் பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(செ-9)

பஸ் - லொறி விப...

ஏற்றி வந்த லொறியும் மோதியதியே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் கை துண்டிக்கப்பட்ட பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், படுகாயமடைந்த மற்றையவர்கள் அநுராதபுரம் மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து தொடர்பாக நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (செ-60)

எனக்கு நன்றா...

படுகொலை செய்யப்பட்ட (முன்னாள்) பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர துப்பாக்கி சூடுபட்டு உயிரிழந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை அவரது புதல்வியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா முதன் முறையாக தனது முகப்புத் தகத்தில் நேற்றைய தினம் வெளியிட்டுள்ளார்.

இந்த படத்தை பார்க்கும் ஒவ்வொரு தருணமும் இது உணமையாக இருந்து விடப் கூடாது என்றே நான் நினைத்துக் கொள்வேன் . ஏனென்றால் எனக்கு நன்றாக நினைவுள் ளது என் தந்தையின மிடுக்கான தோற்றமும் அழகான முகமுமே.

என் வாழ்க்கையில் முதன்முறையாகவே இதனை பிரசுரிக் கிறேன் . உங்கள் அனுதாபங்களை பெற அல்ல. அவரை கொலையாளிகள் எவ்வாறு சுட்டுக் கொன்றுள்ளார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகவே என அவர் அப்படத்திற்கு விளக்கம் கொடுத்துள்ளார். (செ-9)

மேஜர்....

விடப் பிரதிநிதியின் பணியகத்துக்கான புதிய இராணுவ இணைப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் பணியகத்துக்கான இராணுவ இணைப்பதிகாரியாக கடந்த ஒரு ஆண்டாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உபய மெடவெலவின பணிக்காலம் முடிவுற்றதையடுத்தே, மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.(செ-11)

காணி விற்பனை

1. சபாபதி லேன் கொக்குவிலில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2. பலாலி வீதி, திருநெல்வேலியில் 6 1/2 பரப்புக் காணி துண்டுகளாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.

3. கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் 8 பரப்பு, 13 குழி விற்பனைக்கு உண்டு.

077 1671 174
077 7286 061
(5504)

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

- கணனி பக்க வடிவமைப்பாளர். (பெண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் (பெண்கள்)

தகைமையுள்ளவர்களும் பொருத்தமானவர்களும் இன்று (12.09.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு

வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

குறிப்பு : யாழ் நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர் வலம்புரி

மரண அறிவித்தல்

(5898)

திருமதி சிவகுரு நல்லம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் தெற்கு உடுவில் புதுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு நல்லம்மா கடந்த (09.09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கறுவல் - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னாசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரையப்பா சிவகுருவின் பாசமிகு மனைவியும், தர்மலிங்கம், ஜெயநாயகி, செல்வநாயகம் (சுவீடன்), பரராஜசிங்கம், தவமலர், நாகேஸ்வரி, நாகதேவி (பெல்ஜியம்), நல்லசிவம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினம், கௌரிதேவி, ஜீவருவநாதன், கனகநாயகம், இராஜேந்திரம், இராணிமலர், கமலேஸ்வரி, அம்பிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2016) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
நல்லசிவம் - (077 107 2912) - மகன் (சுவிஸ்)

வடக்கின் 1 வது ஹொட்டேல் பயிற்சிக் கல்லூரி

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
school of hospitality

இப்போது...
175, 1ஆம் குறுக்குத்தெரு
(வேம்படி வீதி), யாழ்ப்பாணம்

கற்கைநெறியில் இணையும் மாணவர்களுக்கு
பயிற்சியின்போதே நேரடி தொழில் அனுபவத்தை வழங்கும்
அனைத்து நவீன ஹொட்டேல் வசதிகளுடன்.....

(5731)

• Modern Front Office Set Up • Room Division with 8 Rooms
• Kitchen with Modern Equipments • Library, IT Lab with Wi-Fi
• Modern Lecture Hall with A/C & Multi Media Projector

ஆயுசு100 யாழ்ப்பாண பாரம்பரிய ஆரோக்கிய உணவகம்
Jaffna Traditional Healthy Food Court

Diploma in
Hospitality Management
Front Office - Restaurant- Housekeeping - Culinary Art

முதல் நாளில் இருந்தே தொழிற்பயிற்சி...!
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Week & Weekend Batch
அனுமதிகளுக்கு:
077 3616 798
021 222 0011

www.sikaram.lk Sikaram Academy

அவதானமாக இருங்கள்

மிக குறைந்த கட்டணத்திலான வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

(5884)

✔ பொதிகள் சேவை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வகையில் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படும் பொதிகள் பாதுகாப்பாக உரிய நேரத்தில் சென்றடைவது சாத்தியமற்றதே.

நியாயமான கட்டணத்தில் நிறைவான பொதிகள் சேவையை 20 வருட காலமாக வழங்கி வரும் நாம்

மிகச் சரியான தெரிவு அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.